போரும் இடதுசாரிகளும்

- மார்செல்லோ முஸ்ட்டோ
தமிழாக்கம்: எஸ்.வி.ராஜதுரை•

போருக்கான பொருளாதாரக் காரணங்கள்

போரை நடத்துவதற்கான கருத்துநிலை, அரசியல், பொருளாதார, ஏன் உளவியல் தூண்டுதல்களைப் பற்றி அரசியல் அறிவியல் ஆராய்ந்துள்ளபோதிலும் முதலாளிய வளர்ச்சிக்கும் போர்களின் பரவுதலுக்குமுள்ள உறவை முக்கியப்படுத்திக் காட்டியதன் மூலம், சோசலிசக் கோட்பாடு தன்னுடைய மிக அழுத்தமான பங்களிப்பு களிலொன்றை வழங்கியுள்ளது.

சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் [International Working Men's Association (1864-1872)][≈] *விவாதங்களில், அச்சங்கத்தின் முக்கியமான தலைவர்களிலொருவரான ஸிஸேர் தெ பேப்*[≠] *இந்தப் பிரச்சினையில் தொழிலாளர் இயக்கத்தின் செவ்வியல் நிலைப்பாடாக இருக்கப் போகின்றதை வகுத்தளித்தார்: அதாவது, முதலாளிய உற்பத்தி முறையின் கீழ் போர்கள் தவிர்க்க இயலாதவை என்பதுதான் அது. சமகால சமுதாயத்தில் போர்கள், முடிமன்னர்களின் அல்லது வேறு தனிநபர்களின் பேராசைகளால் அல்ல, மாறாக ஆதிக்கம் செலுத்தும் சமூக-பொருளாதார முன்மாதிரிகளால்தான் கொண்டு வரப்படுகின்றன.*[1]

• *எண்களிடப்பட்ட அடிக்குறிப்புகள் மார்செல்லோ முஸ்ட்டோவாலும் குறிகள் இடப்பட்டவை மொழிபெயர்ப்பாளராலும் வழங்கப்பட்டவை.*

≈ *இது* ***முதல் அகிலம்*** (First International) *எனச் சுருக்கமாக அழைக்கப்படுகிறது*

≠ ***ஸிஸேர் தெ பேப்*** **(César de Paepe: 1841-1890):** *பெல்ஜியத்தைச் சேர்ந்த சோசலிஸ்ட். சொத்துகள் யாவும் நாட்டுடைமாயக்கப்பட வேண்டும் என்று கருதிய அவர், முதல் அகிலத்தில் இருந்த புரூதோனின் ஆதரவாளர்கள் முன்வைத்த பரஸ்பர கூட்டுறவு சங்கம் என்ற கருத்தை எதிர்த்துப் போராடினார். எனினும் பின்னாளில் அவர் அந்த அகிலத்தில் மார்க்ஸுக்கு எதிரான நிலைப்பாடுகளை மேற்கொண்டு இருந்தார். காண்க : மார்செல்லோ முஸ்ட்டோ, சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் வரலாறும் மரபும் (தமிழாக்கம்: எஸ்.வி.ராஜதுரை), என்.சி.பி.எச். பிரைவேட் லிமிடெட், சென்னை, 2015.*

1. Cf. César De Paepe, 'Strike Against War' and 'On the True causes of War', in Marcello Musto (ed.), *Workers Unite! The International 150 Years Later*, New York: Bloomsbury, 2014, pp. 229-31.

போரின் மோசமான பின்விளைவுகளால் மக்களின் எந்தப் பிரிவுகள் மீது மிகவும் பலத்த அடி விழுகின்றது என்பதையும் சோசலிச இயக்கம் எடுத்துக்காட்டியுள்ளது. தங்களுடைய ஆளும் வர்க்கங்களும் அவற்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்கங்களும் மேற்கொள்ளும் முடிவுகளுக்காக - பொருளாதாரரீதியாகவோ அல்லது தங்கள் இரத்தத்தையோ விலையாகக் கொடுக்க வேண்டியவர்கள் தொழிலாளர்கள் தான் - அவர்கள் வெற்றிபெற்றவர்களைச் சேர்ந்தவர்களாயினுஞ்சரி, தோல்வியடைந்தவர்களைச் சேர்ந்தவர்களாயினுஞ்சரி - என்பதால், போர்களை இறுதியாகத் துடைத்தெறியும் இலட்சியத்தைப் பின்பற்றும்படி 1868ஆம் ஆண்டு நடந்த அகிலத்தின் பேராயத்தில் பங்கேற்ற பிரதிநிதிகள் தீர்மானமொன்றை நிறைவேற்றினர்.[2] எந்தப் போரும் 'ஓர் உள்நாட்டுப் போராகத்தான்'[3] கருதப்பட வேண்டும், அதாவது தொழிலாளர்கள் தங்களுக்குத் தேவையான பிழைப்புச் சாதனங்களை அவர்களுக்கு இல்லாமல் செய்துவிடுகின்ற, அவர்களுக் கிடையிலான மூர்க்கத்தனமான மோதலாகவே பார்க்கப்பட வேண்டும் என்ற கருத்திலிருந்தே தொழிலாளர் இயக்கத்திற்கு நாகரிகம் தொடர்பான படிப்பினை கிடைத்தது.

இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பதை எதிர்ப்பதன் மூலமும், வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்வதன் மூலமும் அவர்கள் போருக்கு எதிராக உறுதியாகப் போராட வேண்டியிருந்தது. சர்வதேசியம் என்பது எதிர்கால சமுதாயத்தின் திசைமார்க்கமாக அமைந்தது. அது, முதலாளியம், உலகச் சந்தையில் பூர்ஷ்வா அரசு களுக்கிடையே நடக்கும் போட்டி ஆகியவற்றின் முடிவுடனும், போருக்கு அடிப்படையான முக்கியமான காரணங்களைத் துடைத்தொழித்திருக்கும்.

---

2. "our social institutions as well as the centralization of political power are a permanent cause of war, which can only be removed by a thorough social reform".A previous text delivered by the International Working Men's Association to the Congress of Peace in Geneva, held in September 1867, stated that: "நமது சமூக அமைப்புகளும் அதேபோல் அரசியல் அதிகாரம் மையப்படுத்தப்படுதலும் போருக்கான காரணங்கள். அவற்றை முற்று முழுமையான சமூக சீர்திருத்தம் மூலமாக மட்டுமே அகற்ற முடியும்". See Jacques Freymond (ed.), *La première Internationale*, Geneva: Droz, 1962, vol. I, p. 402. அதற்கு முன், 1867 செப்டம்பரில் ஜெனீவாவில் நடந்த சமாதான மாநாட்டில் சர்வதேசத் தொழிலாளர் சங்கம் படித்த அறிக்கை கூறியது: "போருக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு, இராணுவங்களை ஒழித்துக்கட்டிவிட்டால் மட்டும் போதாது; பொருளுற்பத்தியின் விநியோகத்தை மேன்மேலும் சரிசமமான அளவில் வழங்கும் திசையில் சமூக அமைப்பை மாற்றுவது கூடுதலான அவசியமாகும்". - Karl Marx, 'Resolutions of the Brussels Congress (1868)', in Musto, *Workers Unite!*, cit., p. 92: ibid. p. 234.

3. Jacques Freymond (ed.), *La première Internationale*, cit., p. 403.Cf. Marcello Musto, 'Introduction', in Musto, *Workers Unite!*, cit., p. 49.

சோசலிசத்தின் முன்னோடிகளில் ஒருவரான க்ளோட் ஹான்ரி தெ சான்-சிமோன்• போர், சமூக முரண்பாடு ஆகிய இரண்டுக்கும் எதிரான தீர்மானகரமான நிலைப்பாட்டை மேற்கொண்டு, அவை இரண்டுமே தொழில்புரட்சியின் அடிப்படையான முன்னேற்றத்துக்கான தடைக்கற்கள் என்று கருதினார். கார்ல் மார்க்ஸ், தனது எழுத்துகளில் போர் பற்றிய எந்தக் கருத்தையும் வளர்த்தெடுக்கவில்லை - போர் பற்றிய அவரது கருத்துகள் சிதறல்களாகவும் சிலவேளை ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகவும் இருந்தன; மேலும், போர் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய தெளிவான அணுகுமுறை பற்றிய வழிகாட்டுதல்களையும் அவர் முன்வைக்கவில்லை. எதிரெதிரான முகாம்களில் ஏதோவொன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும்போது, என்றும் மாறாதிருந்தது ஜார் ரஷியாவுக்கு அவர் காட்டிய எதிர்ப்புதான். அது எதிர்ப்புரட்சியின் புறக்காவல் நிலையமாகவும் தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்குள்ள முக்கியமான தடைகளிலொன்றாகவும் இருப்பதாகக் கருதினார். 'மூலதனம்' நூலில் பலாத்காரம் என்பது ஒரு பொருளாதார சக்தி என்றும், "புதியதொன்றைக் கருக்கொண்டிருக்கும் பழைய சமுதாயம் ஒவ்வொன்றுக்கும் பலாத்காரம் என்பது பிரசவம் பார்க்கும் தாதி" என்றும் வாதிட்டார்.[4] ஆனால், சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றுவதற்குப் போரை ஒரு முக்கியமான குறுக்குவழியாக அவர் கருதவில்லை; அவரது அரசியல் செயல்பாட்டின் முக்கியமான குறிக்கோள் சர்வதேச ஒருமைப்பாடு என்ற கோட்பாட்டைத் தொழிலாளர்கள் ஏற்கச் செய்வதாகவே இருந்தது. எங்கெல்ஸும்கூட போர் வெடிக்கும் ஒவ்வொரு முறையும், வெளிநாட்டு எதிரியின் கருத்துப் பரப்புரைத் தலையீடு வர்க்கப் போராட்டத்தை மங்கிவிடச் செய்வதற்கு எதிராக அந்தந்த நாடுகளில் தொழிலாளிகள் உறுதியாகப் போராட வேண்டும் என்று வாதிட்டார். தொழிலாளர் இயக்கத் தலைவர்களுக்கு எழுதிய பல்வேறு கடிதங்களில் எங்கெல்ஸ், தேசப் பற்று என்ற பொறிக்குள்ள கருத்துநிலை வலிமையையும் தேசவெறி அலைகளின் விளைவாகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி தாமதப் படுவதையும் வலியுறுத்திக் கூறினார். மேலும், 'டூரிங்குக்கு மறுப்பு" நூலில் *(1878)*, மேன்மேலும் பயங்கரமானவையாக உற்பத்தியாகிவரும்

• ***க்ளோட் ஹான்ரி தெ சான்-சிமோன்*** **(Claude Henri de Saint-Simon:1760-1825)**: பிரெஞ்சுக் கற்பனா சோசலிஸ்ட். இவரது கருத்துகளைத் தெரிந்துகொள்ள: பிரெடெரிக் எங்கெல்ஸ், *கற்பனா சோசலிசமும் விஞ்ஞானபூர்வமான சோசலிசமும்*, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ.

4. Karl Marx, *Capital, Volume I*, in *Marx Engels Collected Works* (hereafter MECW), vol. 35, p. 739.

ஆயுதங்கள் ஏற்படுத்தும் விளைவுகள் பற்றிய பகுப்பாய்வையடுத்து, "இராணுவவாதத்தையும் நிலையான இராணுவங்களையும்" தகர்த்தெறிவது தான் சோசலிசத்தின் கடமை" என்று கூறினார்.[5]

போரை எங்கெல்ஸ் ஒரு முக்கியமான பிரச்சினை என்று கருதியதால், தன்னுடைய கடைசிக் கட்டுரைகளிலொன்றை இவ்விஷயத்திற்கு அர்ப்பணித்தார்: "ஐரோப்பாவால் ஆயுதக் கலைப்பைச் செய்ய முடியுமா?" (1893) என்ற கட்டுரையில், அவர் முந்தைய இருபத்தைந்து ஆண்டுகளில் ஒவ்வொரு வல்லரசும் தன்னுடைய எதிராளிகளை இராணுவரீதியில் விஞ்சவும், அவற்றைப் போர்த் தயாரிப்புகளுக்கான அடிப்படையில் செய்யவும் முயன்றுகொண்டிருந்ததைக் குறிப்பிட்டார். இதன் விளைவாக முன்னுவமை இல்லாத அளவுக்கு ஆயுத உற்பத்தியின் அளவு உயர்ந்ததையும் அது "உலகம் இதுவரை காணாத அளவுக்கு பேரழிவுப் போருக்கு மேலும் நெருக்கமாக ஐரோப்பாக் கண்டத்தைக் கொண்டுவந்துவிட்டதாகவும்"[6] எழுதினார்.

'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை'யின் (1848) இணையாசிரியரான அவர், "நிலையான இராணுவங்களின் அமைப்பு ஐரோப்பா முழுவதிலும், எந்த அளவுக்கு அதீத எல்லைகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது என்றால், அது இராணுவச் சுமையின் காரணமாக மக்களுக்குப் பொருளாதார நாசத்தைக் கொண்டுவரும் அல்லது மக்களை அழித்தொழிக்கின்ற ஒரு பொதுவான போராகச் சீரழியும்" என்றெழுதினார்.[7] தனது இப்பகுப்பாய்வில் அவர், நிலையான இராணுவங்கள் முதன்மையாக உள்நாட்டு அரசியலுக்காகவே பராமரிக்கப்படுவதையொத்ததாகவே வெளிநாட்டு இராணுவ நோக்கங்களுக்காகவும் பராமரிக்கப்படுகின்றன என்பதை முக்கியத்துவப்படுத்த மறக்கவில்லை. பாட்டாளி வர்க்கத்தையும் தொழிலாளர் இயக்கங்களையும் ஒடுக்குவதற்காகப் படைகளை வலுப்படுத்திக்கொண்டிருப்பது, வெளிநாட்டு எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதைக் காட்டிலும் உள்நாட்டு எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதற்கே கூடுதலாகச் செய்யப்படுகின்றது. வெகுமக்கள் பிரிவினரே போருக்கான செலவை, அரசுக்கான வரிகள், படைகளுக்கான பொருள்கள் ஆகியவற்றின் மூலம் மற்றவர்களைக்காட்டிலும் அதிகமாகக் கொடுப்பதால், தொழிலாளர்களின் இயக்கம் ஒரு சர்வதேச ஒப்பந்தத்தின் மூலம் [இராணுவ] சேவை புரிவதற்கான காலத்தைப் படிப்படியாகக் குறைப்பதற்கும் "சமாதானத்துக்கான செயலூக்கமுள்ள

5. Friedrich Engels, *Anti-Dühring*, in MECW, vol. 25, p. 158.
6. Friedrich Engels, 'Can Europe Disarm?', in MECW, vol. 27, p. 372.
7. Ibid, p.371.

ஒரே உத்தரவாதம் என்ற வகையில் ஆயுதக் குறைப்புக்கும் போராட வேண்டும்'' என்றும் எழுதினார்.

பரிசோதனைகளும் தகர்வும்

எந்த யதார்த்தமான சூழ்நிலைமைகளில் போருக்கு எவ்விதமான ஆதரவையும் தருவதைத் தொழிலாளர் இயக்கத்தின் பிரதிநிதிகள் தொடக்கத்தில் எதிர்த்துவந்தார்களோ, அந்த யதார்த்தமான சூழ்நிலைமைகளைத் தொழிலாளர்களின் இயக்கம் எதிர்கொள்ள வேண்டியிருந்தபோது, சமாதான காலக் கோட்பாட்டு விவாதமொன்று விரைவில் யுகமுக்கியத்துவம் வாய்ந்த அரசியல் பிரச்சினையாயிற்று. பாரிஸ் கம்யூனின் உதயத்துக்கு முன்பு பிரான்ஸுக்கும் பிரஷ்யாவுக்கும் 1970இல் மூண்ட போரின்போது, ஜெர்மனியிலிருந்த சோசலிச ஜனநாயக• நாடாளுமன்ற உறுப்பினர்களான வில்லெஹ்ம் லீப்னெஹ்ட்டும் (Wilhelm Liebknecht), ஓகஸ்ட் பேபலும் (August Bebel) பிஸ்மார்க்கின் ஜெர்மனியின் பிரதேச விஸ்தரிப்பு (இணைப்பு) குறிக்கோள்களைக்

• **சோசலிச-ஜனநாயகம் (Social Democracy)**: உண்மையில் 'Social-Democracy' என்பது 'சோசலிச-ஜனநாயகம்' என்றுதான் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தமிழகத்தில் அது 'சமூக- ஜனநாயகம்' என்று மொழியாக்கம் செய்யப்பட்டு அந்த மொழியாக்கம் நீண்டகாலமாகப் புழக்கத்தில் இருந்து வருகிறது. இந்தச் சொற்றொடருக்கு மேற்கு நாடுகளிலும்கூட வெவ்வேறு வரையறைகள் தரப்பட்டுள்ளன. எனினும் முதலில் அது மார்க்ஸியத்துடன் தொடர்புகொண்ட சொற்றொடராக இருந்தது. அதாவது, அரசியல் ஜனநாயகத்தை மட்டும் உத்தரவாதம் செய்கிற பூர்ஷ்வா ஜனநாயகத்தைக் குறிக்கும் 'ஜனநாயகம்' (Democracy) என்னும் கருத்துக்கு மாறாக, அரசியல் ஜனநாயகத்தைப் பொருளாதார ஜனநாயகமாகவும் விரிவுபடுத்த வேண்டும், தனி உடைமையைக் கூட்டு உடைமையாக்க வேண்டும் என்னும் மார்க்ஸிய சோசலிசத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்காக 'Social-Democracy' என்பது பயன்படுத்தப்பட்டு வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் நிறுவப்பட்ட மார்க்ஸியக் கட்சிகள், 'சோசலிச ஜனநாயகக் கட்சிகள்' எனத் தம்மை அழைத்துக் கொண்டன. இதற்கு மிக முக்கிய எடுத்துக்காட்டு, 1875இல் நிறுவப்பட்ட ஜெர்மன் சோசலிச-ஜனநாயகக் கட்சியாகும்.லெனினின் தலைமையிலிருந்த கட்சியின் பெயர்கூட ரஷிய சோசலிச-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி என்பதுதான். 'இரண்டாம் அகிலம்' (Second International) எனச் சொல்லப்படும் இரண்டாவது சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தில் உறுப்பியம் வகித்த கட்சிகளில் முதன்மையானதும் செல்வாக்கு மிகுந்ததுமான கட்சி ஜெர்மன் சோசலிச-ஜனநாயகக் கட்சியாகும்.இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெர்மன் சோசலிச-ஜனநாயகக் கட்சியைப் போன்ற பல மேற்கு ஐரோப்பியக் கட்சிகள் நாடாளுமன்றப் பாதையின் மூலம் சோசலிசத்தை, படிப்படியாக, அமைதி வழியில் கொண்டுவருதல் என்னும் தந்திர உத்தியைப் பெருமளவில் பின்பற்றத் தொடங்கின. அதாவது சோசலிச-ஜனநாயகம் என்பது 'ஜனநாயக சோசலிசம்' (புரட்சிகர சோசலிசம் என்பதற்கு மாற்றாக) என அழைக்கப்படும் போக்கு வளர்ந்தது. 'சோசலிச →

←ஜனநாயகம்' என்பதற்கான பொருள் 1914ஆம் ஆண்டிலேயே முற்றிலுமாக மாறத் தொடங்கியதாகக் கருதலாம். முதலாம் உலகப் போர் வெடித்ததும் 'தாய் நாட்டைக் காப்பாற்றுதல்' என்னும் பெயரால் இரண்டாம் அகிலத்திலிருந்த பெரும்பாலான சோசலிச-ஜனநாயகக் கட்சிகள் போரை ஆதரித்தன. ஏகாதிபத்தியப் போரில் பாட்டாளிவர்க்கம் பங்கேற்கக்கூடாது என்னும் நிலைப்பாட்டை எடுத்தவர்கள் லெனின், ரோஸா லுக்ஸம்பெர்க் போன்ற சிறுபான்மையினர்தான். அவர்கள் ஜிம்மெர்வால்ட் என்னும் இடத்தில் கூடி இரண்டாம் அகிலத்திலிருந்த சந்தர்ப்பவாதப் போக்கை எதிர்த்துப் போராடினர். 1919 இல் லெனினால் மூன்றாம் அகிலம் நிறுவப்பட்டது. இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாத 'சோசலிச-ஜனநாயகவாதிகளி'டமிருந்து வேறுபடுத்திக் கொண்டவர்கள், தங்களைக் 'கம்யூனிஸ்டுகள்' என அழைத்துக்கொள்ளத் தொடங்கினர். ரஷிய சோசலிச-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியும் ரஷியக் கம்யூனிஸ்ட் கட்சியாகியது. ஜெர்மன் சோசலிச-ஜனநாயகக் கட்சியிலிருந்து வெளியேறியவர்கள் பின்னர் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவினர். ஜெர்மன் சோசலிச-ஜனநாயகக் கட்சியும் வலதுசாரிப் பிரிவாகவும் இடதுசாரிப் பிரிவாகவும் பிளவுபட்டது. இரண்டாம் அகிலத்திலிருந்து புரட்சியாளர்கள் வெளியேறியதும், சந்தர்ப்பவாத சோசலிசவாதிகள் மீண்டும் கூடி அந்த அமைப்பைப் புதுப்பித்தனர். சோசலிச-ஜனநாயகவாதிகளைப் பொருத்தவரை, முதலாளியத்தின் கீழ் ஏற்பட்டுவரும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி தவிர்க்கவியலாதபடி சோசலிசத்திற்கு இட்டுச் செல்லும், முதலாளிய அரசைப் பயன்படுத்துவதன் மூலமே சோசலிசத்தை உருவாக்க முடியும் என்பதாகும். நாளடைவில் சோசலிச-ஜனநாயக இயக்கம், பூர்ஷ்வா அரசாங்கத்தில் தொழிலாளர்களுக்குச் சாதகமான சில சீர்திருத்தங்களைச் செய்வது, சலுகைகளைப் பெற்றுத் தருவது என்னும் நிலைக்குச் சுருங்கிவிட்டது. ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளில் இத்தகைய சோசலிச-ஜனநாயகக் கட்சிகள் உள்ளன. பிரிட்டிஷ் தொழிற்கட்சி, பிரெஞ்சு சோசலிசக் கட்சி, ஜெர்மன் சோசலிச-ஜனநாயகக் கட்சி ஆகியன இத்தகையவைதான். 'உலகமயமாக்கல்' தொடங்கிய பிறகு தொழிலாளர்களுக்குச் சாதகமான சீர்திருத்தத் திட்டங்களைக் கூட இக் கட்சிகள் கைவிட்டுவிட்டு நவ-தாராளவாத சந்தைப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கின்றன. முதலாளிய அரசுக்குள் படிப்படியாகச் சீர்திருத்தத்தைக் கொண்டுவருவதன் மூலம் சோசலிசத்தை உருவாக்க முடியும் என்னும் கருத்தையும்கூடக் கைவிட்டுவிட்டன. வரலாற்றில் இதுவரை தோன்றியுள்ள உற்பத்தி முறைகளில் ஆகச் சிறந்தது முதலாளிய உற்பத்தி முறைதான் என்றும், முதலாளியத்தின் 'எதிர்மறை' அம்சங்களை அகற்றி அதை 'மனிதத்தன்மையாக்க' முடியும் என்றும் இக் கட்சிகள் சொல்கின்றன. 1919க்குப் பிறகு, 'சோசலிச-ஜனநாயகம்' என்னும் சொல், தொழிலாளிவர்க்க இயக்கத்தில் பூர்ஷ்வாக் கருத்துகளின் செல்வாக்கை நிலைநாட்டும் சந்தர்ப்பவாதப் போக்கைக் குறிக்கும் இழிவுக் குறிப்புச் சொல்லாகவே கம்யூனிஸ்ட் இயக்கத்தினரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே,'சோசலிச-ஜனநாயகம்' என்னும் சொல் வரலாற்றின் எந்தக் காலகட்டத்தில் எந்தச் சூழலில் பயன்படுத்தப்படுகிறது என்பதைக்கொண்டே அதனுடைய அர்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். முதலாளியத்துடன் சமரசம் செய்துகொள்ளும் 'சோசலிசவாதிகள்', 'கம்யூனிஸ்டுகள்' ஆகியோரையும்கூட சோசலிச-ஜனநாயகவாதிகள் எனப் புரட்சிகரக் கம்யூனிஸ்டுகள் அழைக்கின்றனர். 'Social Democracy' என்பது எவ்வாறு 'சமூக-ஜனநாயகம்' எனத் தவறாகத் தமிழாக்கம் செய்யப்பட்டு அத் தமிழாக்கம் புழக்கத்திற்கு வந்துள்ளதோ, அதே போல சொல்லில் சோசலிசமும் செயலில் ஏகாபத்தியமும் ஆக இருக்கும் →

கண்டனம் செய்து போர்க் கடன்கள் பெறுவதற்கு எதிராக ஜெர்மன் நாடாளுமன்றத்தில் வாக்களித்தனர்.[8] போரைத் தொடர்ந்து நடத்து வதற்குக் கூடுதலான நிதியைக் கோரும் மசோதாவை நிராகரிக்க அவர்கள் மேற்கொண்ட முடிவு, பெரும் தேசத் துரோகச் செயல் குற்றத்தைப் புரிந்ததற்காக அவர்களுக்கு இரண்டாண்டு சிறைத் தண்டனையை வாங்கித் தந்தது என்றாலும், அந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கான மாற்று வழியைத் தொழிலாளர்களுக்குக் காட்ட உதவியது.

முக்கியமான ஐரோப்பிய வல்லரசுகள் தங்கள் ஏகாதிபத்திய விரிவாக்கத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்ததால், போர் பற்றிய விவாதம் இரண்டாம் அகிலத்தில் (1889-1916) மேன்மேலும் கூடுதலான முக்கியத்துவத்தைப் பெற்று வந்தது. அந்த அகிலத்தை நிறுவுவதற்கான பேராயத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், "தொழிலாளர்களின் எந்த விடுதலைக்கும் இன்றியமையாத முன் நிபந்தனை"[9] என்ற வகையில் சமாதானத்தைப் போற்றிப் புகழ்ந்தது. பூர்ஷ்வா வர்க்கத்தின் சமாதானக் கொள்கை என்று கூறப்பட்டதை அம்மாநாடு கேலிக்குள்படுத்தி அதை 'ஆயுதமேந்திய சமாதானம்' என்று வர்ணித்தது. 1895இல் பிரெஞ்சு சோசலிஸ்ட் கட்சியின் (SFIO) தலைவர் ழான் ழாரெ (Jean Jaurès), நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் இடதுசாரிகளின் அச்சத்தை மிகப் புகழ்பெற்ற வாக்கியங்களில் தொகுத்துக் கூறினார்: "உங்களுடைய வன்முறையான, குழப்பமான சமுதாயம், அது சமாதானத்தை விரும்பும் சமயத்திலும், அது ஓய்வில் இருப்பதாகத் தோன்றும் சமயத்திலும், உறங்கிக் கொண்டிருக்கும் மேகமொன்று தனக்குள் ஒரு புயலைச் சுமந்துகொண்டிருப்பது போல, தனக்குள் ஒரு போரைச் சுமந்து கொண்டிருக்கிறது".[10]

←போக்கையும் அதைப் பின்பற்றும் கட்சிகளையும் குறிக்கும் 'Social-Imperialism' என்பது 'சமூக-ஏகாதிபத்தியம்' என்றும், சொல்லில் சோசலிசமும் செயலில் பாசிசமுமாக உள்ள போக்கைக் குறிக்கும் 'Social Fascism' என்பது 'சமூக-பாசிசம்' என்றும் தவறாகத் தமிழாக்கம் செய்யப்பட்டு அத் தமிழாக்கங்கள் புழக்கத்தில் உள்ளன ('சோசலிசம்', 'சோசலிச- ஜனநாயகம்' ஆகியவற்றுக்கான பல்வேறு வரையறைகள், அர்த்தங்கள் ஆகியவற்றைக் குறித்த தகவல்களுக்கு : Andrew Heywood, *Political Ideologies:An Introduction*, Third Edition, Palgrave, Macmillan, 2004, pp23, 106, 112-114, 116-1117, 124, 139-152, 154, 321, 339; Encyclopedia Britanica, <https://www.britannica.com/topic/social-democracy> (Accessed on 29.11.2020)

8. In William A. Pelz (ed.), *Wilhelm Liebknecht and German Social Democracy: A Documentary History*, Chicago: Haymarket Books, 2016, p. 50.

9. In Raymond H. Dominick, *Wilhelm Liebknecht and the founding of the German Social Democratic party*, Chapel Hill: University of North Carolina Press, 1982, p. 343.

10. Jean Jaurès, *L'Armée nouvelle*, Paris: Imprimerie nationale, 1982, p. 32.

முடிமன்னராட்சி இருந்துவந்த ஜெர்மனியின் உலக அரசியல்-தனது வலிமையை சர்வதேச அரங்கில் விரிவுபடுத்திக் கொள்ளும் அதன் ஆக்கிரமிப்புக் கொள்கை-புவிசார் அரசியல் சூழலை மாற்றியதன் காரணமாக, தொழிலாளர் இயக்கத்தில் இராணுவவாத எதிர்ப்புக் கோட்பாடுகள் ஆழமடைந்து, ஆயுதமேந்திய மோதல்களைப் பற்றிய விவாதங்களின் மீது செல்வாக்குச் செலுத்தின. போர் என்பது, புரட்சிகரமான வாய்ப்புகளுக்கான திறப்பாகவும் முதலாளிய அமைப்பின் தகர்வை விரைவுபடுத்துகின்ற ஒன்றாகவும் மட்டுமே இப்போது பார்க்கப்படவில்லை (அது இடதுசாரிகளிடையே மேக்ஸ்மிலியன் ரோபஸ்பியரின்• கூற்றில் - "புரட்சி இல்லாமல் புரட்சி இல்லை" - என்பதில் முன்பு காணப்பட்ட கருத்து). இப்போது அது பாட்டாளி வர்க்கத்திற்குப் பசி, கடும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் என்ற வடிவத்தில் நேரிடுகின்ற கொடிய பின்விளைவுகளைக் கொண்டு வரும் அபாயமாகப் பார்க்கப்பட்டது. இவ்வாறு அது முற்போக்கு சக்திகளுக்கான கடுமையான அச்சுறுத்தலைத் தோற்றுவித்திருந்தது. 1902இல் எழுதப்பட்ட 'சோசலிசப் புரட்சி' (The Social Revolution) என்ற நூலில் கார்ல் காவுட்ஸ்கி (Karl Kautsky), போர் மூளுமானால் அவர்கள் (முற்போக்கு சக்திகள்) மீது அவர்களுக்கு இன்றியமையாதவையாக அல்லாத கடமைகள் சுமத்தப்படும் என்றும் அவர்களுடைய இறுதி வெற்றி, முன்னைக் காட்டிலும் அண்மையானதாக இல்லாமல் மேலதிகத் தொலைவில் இருப்பதாக மாற்றிவிடும் என்றெழுதினார்.[11]

1907இல் ஜெர்மனியின் ஸ்டுட்கார்ட் நகரில் இரண்டாவது அகிலத்தால் நிறைவேற்றப்பட்ட "இராணுவவாதமும் சர்வதேச மோதல்களும்" என்ற தீர்மானம், தொழிலாளர் இயக்கத்தின் பொதுவான முதுசமாக இருந்ததன் அனைத்து முக்கிய அம்சங்களையும் தொகுத்துக் கூறியது. அவற்றில் இருந்தவற்றில் பின்வருவனவும் அடங்கியிருந்தன: இராணுவச் செலவை அதிகரிக்கும் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்தல்; நிலையான இராணுவங்கள் மீது வெறுப்புக் கொள்தலும் மக்கள் குடிப்படைகள் (people's militia) அமைப்புக்கு முன்னுரிமை தருதலும்; சர்வதேச முரண்பாடுகளைச் சமாதான வழியில் தீர்த்துக் கொள்வதற்குப் பேச்சு வார்த்தைகள் நடத்தும் நீதிமன்றங்களை நிறுவுதல். இந்த அம்சங்களில் எவ்வகையான போர்களுக்கும் எதிராகத் தொழிலாளர்கள் வேலை

• **மேக்ஸ்மிலியன் ரோபெஸ்பியர் (Maximilien Robespierre)**: *1789* ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியை நடத்திய தலைவர்களில் முக்கியமானவர்.

11. Karl Kautsky, *The Social Revolution*, Chicago: Charles Kerr & Co., 1903, p. 77. **கார்ல் காவுட்ஸ்கி (Karl Kautsky)** : ஜெர்மானிய சோசலிச-ஜனநாயகக் கட்சியிலும்→

நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்பது கிஸ்தாவ் ஹெர்வேயின்• முன்மொழிவின் பேரில் விலக்கப்பட்டிருந்தது. அதற்குக் காரணம், அங்கு வந்திருந்த பிரதிநிதிகளில் பெரும்பான்மையினர் அது மிகவும் தீவிரமான தீர்மானம், அதீதமான இரண்டு எல்லைகளுக்கு

←(Social-Democratic Party) இரண்டாம் அகிலம் (Second International) எனச் சொல்லப்படும் சர்வதேச தொழிலாளர் சங்கத்திலும் புகழ்பெற்றிருந்த சோசலிச இயக்கத் தலைவரும் மார்க்ஸியச் சிந்தனையாளருமாவார். எங்கெல்ஸுடன் நேரடியாகப் பழகவும் அவரது படைப்புகள் பலவற்றைத் திரட்டிப் பதிப்பிக்கவும் செய்தவர். 1914இல் முதல் உலகப் போர் மூண்டதும், அவரும் இரண்டாம் அகிலத்தில் இருந்த பெரும்பான்மையான சோசலிசவாதிகளும், 'தாய்நாட்டைப் பாதுகாத்தல்' என்னும் பெயரால், தத்தம் நாட்டு அரசுகளின் போர் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தந்தனர். இந்த நிலைப்பாட்டிற்கு நேர்மாறான புரட்சிகர நிலைப்பாட்டை மேற்கொண்டவர்கள் லெனின், ஜெர்மானிய சோசலிச இயக்கத்தின் மாபெரும் தலைவர்களில் ஒருவராக இருந்த ரோஸா லுக்ஸம்பர்க் போன்றோராவர். உலகை மறு பங்கீடு செய்துகொள்வதற்கு ஏகாதிபத்திய நாடுகள் தமக்கிடையே நடத்தும் போரில் பாட்டாளிவர்க்கம் பங்கேற்கக்கூடாது என்றும் இந்தப் போர் நடக்கையில் ஒவ்வொரு ஏகாதிபத்திய நாட்டையும் சேர்ந்த பாட்டாளிவர்க்கம் அந்தந்த நாட்டில் உள்நாட்டுப் போரைத் தொடங்குவதன் மூலம் பாட்டாளிவர்க்கப் புரட்சி கைகூடி வரச் செய்ய வேண்டும் எனவும் லெனின் அறைகூவல் விடுத்தார். 'ஏகாதிபத்தியம்:முதலாளியத்தின் உச்சகட்டம்' என்னும் நூலில் உலக முதலாளிய ஏகாதிபத்தியச் சங்கிலியில் மிகவும் பலவீன கண்ணியான ஜார் ரஷியாவில்தான் புரட்சிக்கான வாய்ப்பு மிக அதிகமாக இருப்பதாகக் கூறினார். காவுட்ஸ்கியின் 'அதி ஏகாதிபத்தியம்' (ultra-imperialism) என்னும் கருத்தும், தாய்நாட்டைக் காப்பாற்ற சோசலிச-ஜனநாயக இயக்கம் தத்தம் நாட்டு அரசுகளின் போர் நடவடிக்கைக்கு ஆதரவு தர வேண்டும் என்னும் கருத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இவை லெனினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. காவுட்ஸ்கி, 'ஓடுகாலி', 'திருத்தல்வாதி' என அழைக்கப் பட்டார். உண்மையில், காவுட்ஸ்கியின் மீது எங்கெல்ஸுக்கு அவ்வளவு ஆர்வம் இருக்கவில்லை. காவுட்ஸ்கியைவிட அவர் அதிகம் விரும்பியது ஜெர்மன் சோசலிச ஜனநாயகக் கட்சியிலிருந்த இன்னொரு இளம் சிந்தனை யாளரான பேர்ன்ஷ்டைனைத்தான். தாமும் மார்க்ஸும் மிகப் பெரும் மதிப்பு வைத்திருந்த ஜெர்மன் சோசலிஸ்ட் தலைவர் ஓகஸ்ட் பேபலுக்கு எழுதிய கடிதத்தில், பேர்ன்ஷ்டைன் "சாமர்த்தியசாலி, அவர் விஷயங்களை உடனடியாகப் புரிந்துகொள்கிறார், இதற்கு நேர்மாறானவர் காவுட்ஸ்கி. அவர் நேர்மையான ஆள், ஆனால் நிறையப் படித்தவர் என்ற செருக்குடையவர். அற்ப விஷயங்களுக்கும் சர்ச்சை புரிவது அவரது பிறவிக் குணம். சிக்கலான விஷயங்களை அவர் எளிமைப் படுத்துவதில்லை; மாறாக எளிமையான விஷயங்களைச் சிக்கலானதாக்கி விடுபவர்" என்கிறார். எங்கெல்ஸைப் பொருத்தவரை, பத்திரிகைகளுக்கு ஏற்றவற்றை எழுதுவதில் சிலசமயம் அவர் (காவுட்ஸ்கி) "உண்மையிலேயே நல்ல கட்டுரைகளை எழுதக்கூடியவர். ஆனால், என்ன சிரமப்பட்டாலும் அவரால் அவரது இயல்பை வெற்றிகொள்ள முடியாது. அது அவரைவிட வலுவானது. ஒரு செய்தியேட்டில் இவரைப் போன்ற வறட்டுக் கோட் பாட்டாளரை வைப்பது பேரழிவு". காவுட்ஸ்கியைப் பற்றி இப்படிப்பட்ட →

இட்டுச் செல்வது என்று கருதியதுதான். இந்தத் தீர்மானம் ரோஸா லுக்ஸம்பர்க் (Rosa Luxemburg), விளாடிமிர் லெனின் (Vladimir Lenin), யூலி மார்தோவ் (Yulii Martov)• ஆகியோர் கொண்டுவந்த பின்வரும் திருத்தத்துடன் முடிவடைந்தது: "போர் மூளுமானால் [...] [சோசலிஸ்டுகளின்] கடமை அதை விரைவில் முடிவுக்குக் கொண்டுவருவதற்கு சாதகமாக அதில் தலையிடுதல்; தங்கள் சக்தியனைத்தையும் கொண்டு போரால் உருவாக்கப்படும் பொருளாதார, அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்திக் கொள்ளுதல்: வெகுமக்களைத் தட்டியெழுப்பி அதன் மூலம் முதலாளி வர்க்க ஆட்சியின் வீழ்ச்சியை விரைவுபடுத்துதல்"[12]. ஆயினும், இது ஜெர்மன் சோசலிச ஜனநாயகக் கட்சியின் அரசியல் மார்க்கத்தில் மாற்றம் எதனையும் செய்யும்படி அக்கட்சியைக் கட்டாயப்படுத்தாததால், அக்கட்சியின் பிரதிநிதிகளும் அத்திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். திருத்தத்துடன் கூடிய அத்தீர்மானம்தான், இரண்டாம் அகிலத்தின் ஒருமித்த ஆதரவைப் பெற்ற, போர் பற்றிய கடைசி ஆவணமாகும்.

உலகச் சந்தையில் முதலாளிய அரசுகளிடையே மேலும் ஆழமான போட்டி நடந்து வந்ததும், பல சர்வதேச மோதல்கள் வெடித்ததும், பொதுவான சித்திரம் இன்னும் அதிக அளவில் அச்சந்தரக் கூடியதாக மாறியது. ழான் ழாரெவின் 'புதிய இராணுவம்' (The New Army [1911] என்ற கட்டுரை வெளிவந்து, அக்காலத்தின் இன்னொரு முக்கிய பேசுபொருளைப் பற்றிய விவாதத்தை ஊக்குவித்தது. அதாவது தாக்குதல் போர்களுக்கும் தற்காப்புப் போர் களுக்குமுள்ள வேறுபாடு, ஒரு நாட்டின் சுதந்திரம் அச்சுறுத்தப்படும் நிகழ்வுகள் உள்பட தற்காப்புப் போர்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலைப்பாடு ஆகியன பற்றிய விவாதமே அது. ழாரெவைப் பொருத்தவரை, இராணுவத்தின் ஒரே கடமை, எந்தவொரு தாக்குதல் ஆக்கிரமிப்புக்கும் எதிராகவோ, பேச்சுவார்த்தை மூலம் தகராறுகளைத் தீர்த்துக்கொள்வதை ஏற்றுக்கொள்ளாத எந்த ஆக்கிரமிப்பாளருக்கும் எதிராகவோ நாட்டைப் பாதுகாப்பதுதான். இந்த வகைப்பாட்டுக்குள் வருகின்ற அனைத்து இராணுவ நடவடிக்கைகளும் நீதியானவையாகவே

←கருத்தைக் கொண்டிருந்ததால்தான் எங்கெல்ஸ், 'சோசலிச-ஜனநாயகவாதி' (Der Sozialdemokrat) என்னும் ஜெர்மன் ஏட்டின் ஆசிரியராகத் தொடர்ந்து பணியாற்ற பேர்ன்ஷ்டைனை இசைய வைத்தார். (Friedrich Engels to August Bebel, 25 August 1881, in MECW, vol. 46, p. 137.)

• **யூலி மார்தோவ் (Yulii Martov)**: பின்னாளில் மென்ஷ்விக்குகளின் இடதுசாரிப் பிரிவுக்குத் தலைவராக இருந்தவர்.

12. International Socialist Congress at Stuttgart',in Vladimir I. Lenin, *Collected Works*, Moscow: Progress Publishers, 1972, vol. 13, p. 80

கருதப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டைப் பற்றிய ரோஸா லுக்ஸம்பர்க்கின் தெளிவான பார்வையுடைய விமர்சனம் சுட்டிக் காட்டியது: "நவீனகாலப் போர்கள் போன்ற வரலாற்றுரீதியான நிகழ்ச்சிப் போக்குகளை 'நீதி' என்ற அளவுகோலைக் கொண்டோ, தற்காப்புப் போர், தாக்குதல் போர் என்று காகிதத்தில் வரையப் பட்டுள்ள முன்மாதிரிகளைக் கொண்டோ அளவிட முடியாது. ஒரு போர் உண்மையிலேயே தாக்குதல் தன்மையுடையதா அல்லது தற்காப்புத் தன்மையுடையதா என்பதை நிறுவுவதோ, அல்லது போரைத் தொடங்கியுள்ள ஓர் அரசு மற்ற அரசின் மீது திட்டமிட்டே தாக்குதல் தொடுக்க முடிவு செய்துள்ளதா அல்லது அதை எதிர்க்கும் அரசு ஏற்றுக்கொண்டுள்ள தந்திர உபாயங்களின் காரணமாக அந்தப் போரைத் தொடுக்க நிர்பந்திக்கப்பட்டுள்ளதா என்பதை நிறுவுவது கடினம் என்பதை மனதில் கொள்வது அவசியம்"[13] என்று ரோஸா லுக்ஸம்பர்க் கருதினார். ஆகவே, மேற்சொன்னது போல இரு வகையான போர்களை வேறுபடுத்திப் பார்ப்பதை நிராகரிக்க வேண்டும் என்று கூறிய அவர், ழாரெ கூறிய "ஆயுதமேந்திய தேசம்" என்ற கருத்து இறுதியில், சமுதாயத்தில் வளர்ந்துவரும் இராணுவவாதத்திற்குத் தூபம் போட்டு வளர்க்கும் போக்கைக் கொண்டிருக்கிறது என்று விமர்சிக்கவும் செய்தார்.

ஆண்டுகள் செல்லச் செல்ல, இரண்டாம் அகிலம், சமாதானத்துக்கு சாதகமான நடைமுறைக் கொள்கைக்கான ஈடுபாட்டைக் குறைத்துக் கொண்டே வந்தது. அரசுகள் தங்கள் இராணுவங்களில் புதிய ஆயுதங்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் போர் ஆயத்தங்களுக்கும் ஜெர்மன் சோசலிச ஜனநாயகக் கட்சி காட்டிய எதிர்ப்பு மிகவும் ஆர்வக் குறைவானவையாக இருந்ததுடன், மேன்மேலும் மிதவாதத்தன்மை கொண்டதாகி வந்ததும் சட்டவாதத்தன்மை கொண்டதுமாகிய அக் கட்சிப் பிரிவொன்று இராணுவக் கடன்கள் வாங்குவதற்குத் தன் ஆதரவைத் தெரிவித்ததுடன், ஜெர்மனியில் மேலதிகமான அரசியல் சுதந்திரங்களைப் பெறுவதற்காக, ஜெர்மனியின் காலனிய விரிவாக்கத்துக்கும் ஆதரவு கொடுத்தது. கிஸ்தாவ் நோஸ்கெ (Gustav Noske), ஹென்ரி ஹைண்ட்மன் (Henry Hyndman), அன்டோனியோ லாப்ரியோலா (Antonio Labriola) போன்ற முக்கியமான தலைவர்களும் புகழ்பெற்றிருந்த கோட்பாட்டாளர்களும் இந்த நிலைப்பாடுகளுக்கு முதலில் வந்து சேர்ந்தவர்களில் அடங்குவர். அதன் பிறகு, ஜெர்மன் சோசலிச ஜனநாயகக் கட்சியிலிருந்த

13. Rosa Luxemburg, *'L'Armée nouvelle de Jean Jaurès'*, available at https://www.marxists.org/francais/luxemburg/works/1911/06/armee.htm

பெரும்பான்மையினர் , பிரெஞ்சு சோசலிஸ்டுகள், பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர்கள், பிற ஐரோப்பிய சீர்திருத்தவாதிகள்• ஆகியோர் முதல் உலகப் போரை *(1914-1918)* ஆதரித்தவர்களாயினர். அவர்கள் மேற்கொண்ட இந்தப் பாதை பேரழிவுமிக்க பின்விளைவுகளைக் கொண்டதாயிற்று. "முன்னேற்றத்தின் நன்மைகளை" முதலாளிகள் தங்கள் முற்றுரிமையாக்கிக் கொள்ளக்கூடாது என்ற கருத்துடன், தொழிலாளர்களின் இயக்கம், ஆளும் வர்க்கங்களின் விரிவாக்கக் குறிக்கோள்களைப் பகிர்ந்துகொண்டதுடன், அதன் மீது தேசியவாதக் கருத்துநிலை படரும்படி செய்யப்பட்டன. முதல் உலகப் போர் மூண்டபோது, இரண்டாம் அகிலம் முற்றிலுமாக வீரியமற்றதாகி, தனது முக்கிய குறிக்கோள்களிலொன்றைப் பாதுகாத்தலை - அதாவது சமாதானத்தைப் பாதுகாத்தலை - செய்யத் தவறியது.

ஜிம்மர்வால்ட்* மாநாட்டில் (Zimmerwald conference [1915]) கலந்து கொண்ட லெனினும் அந்த மாநாட்டின் நகல் அறிக்கையை எழுதிய லெவ் த்ரோத்ஸ்கி உள்ளிட்ட பிற பிரதிநிதிகளும் "பல பத்தாண்டு காலப் போர்ச் செலவு மக்களின் ஆகச்சிறந்த ஆற்றலை உள்ளிழுத்துக் கொள்ளும், சமூக மேம்பாடுகளுக்குக் குழி பறிக்கும், எல்லாவகை முன்னேற்றத்துக்கும் முட்டுக்கட்டையிடும்" என்பதை முன்கூட்டியே பார்த்தனர். அவர்களுடைய கண்களுக்கு, "நவீன முதலாளியத்தின் நிர்வாண வடிவம், உழைக்கும் வெகுமக்களின் நலன்களோடு மட்டுமல்ல [...], மானுட சமூக வாழ்வின் முதல் நிபந்தனைகளுடன்கூட ஒத்திசைவிக்க முடியாததாகும்"[14]. அந்த எச்சரிக்கைக்கு, கியெந்தால்* மாநாட்டில் (Kienthal Conference [1916]) ஐரோப்பியத் தொழிலாளர்களுக்கு அவர்கள் விடுத்த அறைகூவலைப் போலவே தொழிலாளர்களின் இயக்கத்தில் ஒரு சிறுபான்மையினர் மட்டுமே செவிமடுத்தனர். அந்த அறைகூவல் கூறியதாவது: "உங்கள் அரசாங்கங்களும் அவற்றின் ஏடுகளும், இராணுவவாதத்தைக் கொல்வதற்காகவே போர் தொடரப்பட வேண்டும் என்று உங்களுக்குச் சொல்கின்றன. அவை உங்களை ஏமாற்றுகின்றன!

• **சீர்திருத்தவாதம் (reformism)**: பொதுவாக, இந்தச் சொல்லுக்கு நேர்மறையான பொருள்தான் உண்டு. ஆனால், மார்க்ஸியச் சொல்லாடல்களில் இது, முதலாளிய அமைப்புக்குள்ளேயே சில சலுகைகளைப் பெற்றுக்கொள்வது, தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது போன்ற வரம்பு களுக்குள்ளேயே நின்று கொண்டு, முதலாளிய சமுதாயத்தைப் புரட்சிகரமான முறையில் சோசலிச சமுதாயமாக மாற்ற விரும்பாத பொருளாதார, அரசியல் போக்கையே குறிக்கும்.

⋆ இரண்டாம் அகிலத்தின் போர் ஆதரிப்பு, சந்தர்ப்பவாத நிலைப்பாட்டுக்கு எதிராக நடந்த மாநாடுகள்.

14. The Zimmerwald Manifesto', in Leon Trotsky, *The War and the International,* available at https://www.marxists.org/archive/trotsky/1914/war/part3.htm# zimman.

போர், போரை ஒருபோதும் கொன்றதில்லை. உண்மையில், அது பழிக்குப் பழி வாங்குவதற்கான உணர்ச்சிகளையும் விருப்பங்களையுமே தூண்டிவிடும். இவ்வாறு தியாகத்துக்காக உங்களை அடையாளப் படுத்தும். அவை உங்களைப் பெருந்தீ வட்டத்திற்குள் அடைக்கும்". சர்வதேச மத்தியஸ்த நீதிமன்றங்களை அமைக்குமாறு கூறிய ஸ்டுட்கார்ட் மாநாட்டின் அணுகுமுறையுடன் இறுதியாக முறிவு ஏற்படுத்திக்கொண்ட கியெந்தால் மாநாட்டின் இறுதி ஆவணம் கூறியது: 'பூர்ஷ்வா சமாதானவாதம் என்ற மாயைகள்'[15] போர் என்ற சுழல் வட்டத்தில் குறுக்கிடா, ஆனால் ஏற்கெனவே இருந்துவரும் சமூக-பொருளாதார அமைப்பைப் பேணிப் பாதுகாக்க உதவும். எதிர்கால இராணுவ மோதல்களைத் தடுத்து நிறுத்துவதற்கான ஒரே வழி, பரந்துபட்ட வெகுமக்கள் அரசியல் அதிகாரத்தை வென்றெடுத்துக் கொள்வதும் முதலாளிய சொத்துடைமையைத் தூக்கியெறிவதும்தான்".

போருக்கு மிக அதிக எதிர்ப்பைக் காட்டியவர்கள் ரோஸா லுக்ஸம்பர்க், விளாடிமிர் லெனின் ஆகிய இருவர்தான். இடதுசாரிகளின் கோட்பாட்டுப் புரிதலை விரிவுபடுத்திய ரோஸா லுக்ஸம்பர்க், இராணுவவாதம் என்பது அரசின் முக்கியமான முதுகெலும்பு என்பதை எடுத்துக் காட்டினார். போர் எதிர்ப்புப் பற்றுறுதியிலும் செயலாற்றலிலும் இதர கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருசிலரை மட்டுமே தனக்கு சமதையாகக் கொண்டிருந்த ரோஸா லுக்ஸம்பர்க், "போர் மீதான போர்" என்ற முழக்கம்தான் "தொழிலாளி வர்க்க அரசியலின் ஆதாரப் பகுதியாக மாற வேண்டும்" என்று கூறினார். 'ஜூனியஸ் வெளியீடு' (Junius Pamphlet) என்ற பெயராலும் அறியப்படும் 'சோசலிச ஜனநாயகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி' (The Crisis of Social Democracy [1916]) என்னும் வெளியீட்டில் அவர், "எல்லா நாடுகளிலுமுள்ள பாட்டாளி வர்க்கங்களுக்குப் பொதுவான நடைமுறைத் தந்திரம், நடவடிக்கை ஆகியவற்றைச் சாதிக்கத் தவறியதால்தான் இரண்டாவது அகிலம் உள்ளிருந்தே தகர்ந்துவிழுந்துவிட்டது" என்றும், ஆகவே இப்போதிருந்தே பாட்டாளிவர்க்கத்தின் "முதன்மையான இலக்கு", ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதும் சமாதான காலத்திலும் போர்க்காலத்திலும் போர்களைத் தடுத்து நிறுத்துவதும் ஆகும்" என்று கூறினார்.[16]

15. The Second International Socialist Conference at Kienthal', in Vladimir I. Lenin, *Collected Works*, Moscow: Progress Publishers, 1977, vol. 41, p. 371

16. Rosa Luxemburg, *The Junius Pamphlet: The Crisis of German Social Democracy*, chapter 7, available at https://www.marxists.org/archive/luxemburg/1915/junius/ch07.htm

'சோசலிசமும் போரும்' (Socialism and War [1915] என்ற கட்டுரையிலும், முதல் உலகப் போரின்போது எழுதப்பட்ட வேறு பல எழுத்துகளிலும் லெனின் வெளிப்படுத்திய மகத்தான சிறப்பு, இரண்டு அடிப்படையான பிரச்சினைகளை அவர் அடையாளப் படுத்தியது ஆகும். முதல் பிரச்சினை, யதார்த்தத்தில் கொள்ளையடிப் பதற்கான போர்களுக்கு, போரில் ஈடுபட்டுள்ள இரு சண்டைக்காரர்களில் இப்போது மிக அதிகமான வெளிநாட்டு மக்களை ஒடுக்கப்போவதும் முதலாளியம் உருவாக்கியுள்ள ஏற்றத்தாழ்வுகளை அதிகப்படுத்துவதும் யார் என்பதை முடிவு செய்யும் ஒரே நோக்கத்துடன் இரு சண்டைக் காரர்கள் ஈடுபட்டுள்ள இந்தப் போர்களுக்கு "தேசிய விடுதலை என்ற முற்போக்கான அர்த்தத்தை" வழங்கும் "வரலாற்றுரீதியான மோசடி"யுடன் சம்பந்தப்பட்டது முதல் அடிப்படையான பிரச்சினை.[17] இரண்டாவது அடிப்படைப் பிரச்சினை, இரண்டாம் அகிலத்தின் தீர்மானங்களில் போரை "குற்றத்தன்மையுள்ள நடவடிக்கை" என்று வரையறுத்துள்ளதை மீறி, இறுதியில் போருக்கான நியாயங்களுக்கு ஒப்புதல் வழங்கிய சோசலிச சீர்திருத்தவாதிகள் அல்லது லெனினின் வார்த்தைகளில் 'சோசலிச-தேசவெறியர்கள்' முரண்பாடுகளை மூடிமறைத்தது தொடர்பானதாகும்.

"தாய்நாட்டைப் பாதுகாத்தல்" என்று வல்லரசுகள் உரிமை கொண்டாடியதற்குப் பின்னால், "காலனி நாடுகளைக் கொள்ளையடிப் பதற்கும் வெளிநாட்டு மக்களை ஒடுக்குவதற்கும்" அவை தமக்குத் தாமே வழங்கிக்கொண்ட உரிமை இருந்தது. போர்கள் நடத்தப்படுவது "தேசங்களின் இருப்பை"ப் பாதுகாப்பதற்கு அல்ல, மாறாக, பல்வேறு ஏகாதிபத்திய "பூர்ஷ்வா வர்க்கங்கள்" தங்களது சிறப்புரிமைகளையும் ஆதிக்கத்தையும் கொள்ளையையும் வன்முறையையும் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான்" என்றார் லெனின்.[18] தேசபக்தியிடம் சரணடைந்த சோசலிஸ்டுகள் வர்க்கப் போராட்டத்திற்குப் பதிலியாக "பிற நாடுகளைக் கொள்ளையடிப்பதன் மூலம் அவர்களது தேசிய பூர்ஷ்வா வர்க்கங்கள் பெற்றுள்ள இலாபங்களில் சில துண்டு துக்காணிகளைப் பெறுவதற்கு உரிமை கொண்டாடுவது தான்".[19] ஆகவேதான் லெனின், ழாரெ கூறியது போன்ற ஐரோப்பிய நாடுகளின் "தற்காப்புப் போர்களை" அல்ல; மாறாக, அடிமை உடைமை யாளர்களாக இருக்கும் வல்லரசுகளால்[20] கொள்ளையடிக்கப்பட்டும் உரிமைகள் பறிக்கப்பட்டுமுள்ள

17. Vladimir I. Lenin, *Socialism and War*, in *Collected Works*, Moscow: Progress Publishers, 1971, vol. 21, pp. 299-300.
18. Ibid, p. 306.
19. Ibid, p. 307
20. Ibid, p. 314

ஒடுக்கப்பட்டும் அடிமைப்படுத்தப்பட்டுமுள்ள மக்களின் "நியாயமான போர்களை" ஆதரித்தார்[21]. இந்தச் சிறு வெளியீட்டிலுள்ள, மிகவும் போற்றப்பட்டுள்ள ஆய்வுரை - "ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்ற வேண்டும் என்ற ஆய்வுரை[22]" - நீடித்து நிற்கிற ஜனநாயக சமாதானத்தை "உண்மையிலேயே விரும்புபவர்கள், தங்கள் அரசாங்கங்களுக்கும் தங்கள் நாட்டு பூர்ஷ்வாக்களுக்கும் எதிராக உள்நாட்டுப் போரை நடத்தியாக வேண்டும்" என்று கூறியது. வரலாறு பிற்காலத்தில் துல்லியமற்றது என்று காட்டிய ஒன்றின் மீது லெனின் நம்பிக்கை வைத்திருந்தார்: அதாவது போர் நடக்கும் தறுவாயில் முரணற்ற வகையில் நடத்தப்படும் எந்த வர்க்கப் போராட்டமும் "தவிர்க்க முடியாதபடி" வெகுமக்களிடையே புரட்சிகர உணர்வை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கைதான் அது.

வரையறை செய்வதன் எல்லைக் கோடுகள்

முதல் உலகப் போர் இரண்டாம் அகிலத்தில் மட்டுமல்ல, ஆட்சிமறுப்பிய இயக்கத்திற்குள்ளும்• பிளவுகளை ஏற்படுத்தியது. போர்

21. Ibid, p. 315. At the time of the Franco-Prussian War of 1970, Mikhail Bakunin had also urged the workers to turn patriotic war into revolutionary war. See Marcello Musto, 'Introduction', in Musto, *Workers Unite!*, cit., p. 49.

22. V.I.Lenn, Op.Cited., p. 316

• **ஆட்சி மறுப்பியம் (Anarchism)**: 'Anarchism' என்பது 'அராஜகவாதம்' என்று தமிழாக்கம் செய்யப்பட்டு, நீண்டகாலமாகப் புழக்கத்தில் இருந்துவருவது மட்டுமல்ல; குழப்பம் விளைவிக்கும் செயல்கள், ஒழுங்கீனமான, சட்டவிரோத நடவடிக்கைகள், சமூகவிரோதச் செயல்பாடுகள் முதலியவற்றைக் குறிப்பதற்கும் 'அராஜகவாதம்' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனல், தீவிரமான அரசியல், சமூக, பொருளாதாரச் சிந்தனைகள் பலவற்றைக் குறிக்க இந்தச் சொல் பொருத்தமற்றது என்பதால் 'ஆட்சி மறுப்பியம்' என்ற சொல்லாக்கத்தைப் பயன்படுத்துவதுதான் சரியானது. பல்வேறு வகையான, பெரிதும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துநிலைகளுக்கான (ideologies) பொதுப் பெயரே 'ஆட்சி மறுப்பியம்'. அதாவது, ஒரு தேசத்திலோ, சமுதாயத்திலோ அரசு மட்டுமல்ல, எந்த நிலையிலும் எவ்வகையான அதிகார வடிவமோ, அதிகார அமைப்போ இருக்கக்கூடாது; மேல்-கீழ் வரிசையிலான அமைப்புகள் இருக்கக்கூடாது என்று கூறும் சிந்தனைப் போக்குகளே இவை. இவை அனைத்தும், மனிதர்கள் மீதான ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்குமான மூலாதாரம், அவர்களுக்கு வெளியே உள்ள சக்தி , குறிப்பாக அரசுதான் என்று கருதுகின்றன. இக்கருத்துகளைக் கொண்டவர்களுக்கு மாறாக, சோசலிஸ்டுகளோ, முதலாளியத்தின் சமூக உறவுகள்தான் (இவற்றுள் அரசும் அடங்கும்) ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் காரணம் என்று கருதுகிறார்கள். இந்தச் சிந்தனைப் போக்கும் சோசலிசக் கண்ணோட்டமும் இணைந்திருந்த கோட்பாட்டினைக் கொண்டிருந்தவர்கள் தாம் பக்கூனினும் அவரது ஆதரவாளர்களும். 'அதை அவர்கள் 'ஆட்சி மறுப்பியக் கம்யூனிசம்' (Anarcho-Communism) என்றழைத்தனர். கம்யூனிசம் என்ற இலக்கு மார்க்ஸியத்திற்கும் ஆட்சிமறுப்பிய-கம்யூனிசத்துக்கும் பொதுவானதாக→

மூண்ட சிறிய காலத்திற்குள் க்ரோபோட்கின்≈ எழுதினார்: "மானுட முன்னேற்றம் என்ற கருத்தை நேசிக்கும் எந்த மனிதரும் மேற்கு ஐரோப்பாவில் நடந்துவரும் ஜெர்மன் படையெடுப்பை நசுக்கியாக வேண்டும்"[23]. க்ரோபோட்கின் தன் வாழ்நாள் முழுக்க எந்தக் கோட்பாடுகளுக்காகப் போராடி வந்தாரோ அவற்றைக் கைவிட்டு விட்டதாகப் பலராலும் கருதப்பட்ட இந்தக் கூற்று, உழைக்கும் வெகுமக்களால் செவிமடுக்கப்படாமல்போன முழக்கமான "போருக்கு எதிராகப் பொது வேலைநிறுத்தம் செய்தல்" என்பதைக் கடந்து செல்வதற்கும் ஜெர்மனி வெற்றி பெறுமானால் ஐரோப்பிய அரசியல் சந்திக்கக்கூடிய பொதுவான பின்னடைவைத் தவிர்ப்பதற்கும் செய்யப்பட்ட முயற்சியாகும். போர் எதிர்ப்பாளர்கள் செயலற்றிருந்தால், அவர்கள் படையெடுப்பாளன் வைத்திருக்கும் திட்டத்திற்கு மறைமுகமாக ஆதரவளிப்பவர்களாவர் என்றும் இதன் காரணமாக ஏற்படும் தடையைக் கடந்து வருவது சோசலிசப் புரட்சிக்காகப் போராடுபவர்களுக்கு மேலும் கடினமாகிவிடும் என்றும் க்ரோபோட்கின் கருதினார்.

க்ரோபோட்கினுக்கு எழுதிய பதிலில் இத்தாலிய ஆட்சி மறுப்பியரான என்ரிகோ மாலடெஸ்டா (Errico Malatesta), தான் ஒரு போர் எதிர்ப்பு சமாதானவாதியல்ல, விடுதலைப் போருக்காக ஆயுதமேந்துவது நியாயமானது என்று கருதுகிறவன்தான் என்றாலும், உலகப் போரானது பூர்ஷ்வா பரப்புரை அடித்துக் கூறுவது போல "ஜனநாயகத்தின் பொது எதிரிக்கு எதிராகப் பொது நன்மைக்காக" நடத்தப்படும் போராட்டமல்ல, மாறாக, உழைக்கும் வெகுமக்களை ஆளும் வர்க்கத்திற்கு அடிமைப் படுத்துவதற்கான இன்னொரு எடுத்துக்காட்டுதான் என்று கூறினார்.[24] ஜெர்மனியின் வெற்றி நிச்சயமாக இராணுவவாதத்தின் வெற்றியை அறிவிக்கும்; நேசநாடுகளுக்குக் கிடைக்கும் வெற்றியோ ஐரோப்பா

←இருந்தபோதிலும், அதை அடைவதற்கான வழிமுறைகள் இவை இரண்டுக்கும் வெவ்வேறானவை. அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குத் தொழிலாளி வர்க்கம் உணர்வுபூர்வமாகவும் அரசியல்ரீதியாகவும் தன்னை ஒழுங்கமைத்துக் கொள்ள இயலாது, அப்படிச் செய்யவும் கூடாது என்று கூறும் அவர்கள்,கிளர்ச்சி செய்வதையும் அரசைப் புறக்கணித்துவிட்டு சமுதாயத்தை மாற்றுவதையும் விரும்புகிறார்கள்.

≈ **க்ரோபோட்கின் (Peter Kropotkin: 1842-1921):** ரஷியாவிலிருந்த முக்கியமான ஆட்சிமறுப்பியத் தலைவர்.

23. Peter Kropotkin, 'A Letter on the Present War', *Freedom*, October 1914, pp. 76-77.

24. Errico Malatesta, 'Anarchists have forgotten their principles, 1914' in Vernon Richards (ed), *Malatesta: Life & Ideas*, London: Freedom Press, 1993, p. 230.

மீதும் ஆசியா மீதும் ரஷிய-ஆங்கிலேய ஆதிக்கத்தைக் கொண்டு வரும்" என்பதை அவர் அறிந்திருந்தார்.

பதினறுவரின் அறிக்கையில் (Manifesto of the Sixteen [1916]), விடுதலை பற்றிய நமது நம்பிக்கைகள் அனைத்திற்கும் ஏற்படுத்தும் அழிவைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஆக்கிரமிப்பாளரை எதிர்க்க வேண்டிய தேவையை க்ரோபோட்கின் உயர்த்திப் பிடித்தார். ஜெர்மனிக்கு எதிரான மூன்று நேசநாடுகள் அடையும் வெற்றி குறைந்த தீமையுடையது என்றும், ஏற்கெனவே இருந்துவரும் சுதந்திரங்களுக்குக் குறைந்த அளவே குழிபறிக்கும் என்றும் க்ரோபோட்கின் வாதிட்டார்.[25] மறுபுறம், 'ஆட்சி மறுப்பிய அகிலத்தின் அறிக்கை'யில் (Manifesto of the Anarchist International [1915], கையெழுத்திட்ட மாலடெஸ்டாவும் அவருடன் இணைந்து கையெழுத்திட்ட பிறரும் அறிவித்தனர்: "தாக்குதல் போருக்கும் தற்காப்புப் போருக்குமிடையே எந்த வேறுபாடும் சாத்தியமில்லை". மேலும், "போர் புரிபவர்களில் எவருக்கும் நாகரிகத்துக்கு உரிமை கொண்டாடும் உரிமை இல்லை, அவர்களில் ஒருவருக்குக்கூட நியாயமான தற்காப்புக்கு உரிமை கொண்டாடும் தகுதி இல்லை" என்றும், முதல் உலகப் போர் உழைக்கும் வர்க்கத்திற்கு இழப்பு ஏற்படுத்திக்கொண்டு பல்வேறு ஏகாதிபத்திய அரசுகளின் முதலாளிகள் நடத்திக்கொண்டிருக்கும் மோதல்களின் இன்னொரு நிகழ்வுதான் என்றும் அவர்கள் வலியுறுத்திக் கூறினர்.[26] மாலடெஸ்டா, எம்மா கோல்ட்மன், •ஃபெர்டினாண்ட் நியுவென்ஹுய்ஸ்• மற்றும் ஆட்சி மறுப்பிய இயக்கத்திலிருந்த மிகப் பெரும்பான்மையினர், பூர்ஷ்வா அரசாங்கங்களை ஆதரிப்பது மன்னிக்க முடியாத தவறு என்று உறுதியாக நம்பினர். அதுமட்டுமின்றி, எவ்வித சந்தேகத்துக்குமிடமின்றி, அவர்கள் "இராணுவத்திற்கு ஓர் ஆளையும் தர மாட்டோம், ஒரு பைசாவையும் தர மாட்டோம்" என்ற முழக்கத்தை இறுகப் பற்றிக்கொண்டு, போரை நடத்துவதில் எவ்விதமான மறைமுக ஆதரவைத் தருவதையும்கூட உறுதியாக நிராகரித்தனர்.

---

25. Peter Kropotkin et al., *The Manifesto of the Sixteen*, available at https://www.marxists.org/reference/archive/kropotkin-peter/1916/sixteen.htm

26. Errico Malatesta et al, 'Anti-War Manifesto', published as 'Malatesta, the Anarchist International and War', in D. Guérin (ed.), *No Gods, No Masters: An Anthology of Anarchism*, Oakland: Ak Press, 1998, p. 388.

- **எம்மா கோல்ட்மன் (Emma Goldman: 1869-1940)**: அமெரிக்க ஆட்சிமறுப்பிய, பெண்ணியக் களப் போராளி, கோட்பாட்டாளர். **•ஃபெர்டினாண்ட் நியுவென்ஹுய்ஸ்** (Ferdinand Nieuwenhuis:1846-1919) : டச்சு நாட்டு ஆட்சி மறுப்பியக் களப் போராளி.

போர் தொடர்பான அணுகுமுறைகள் பெண்ணிய இயக்கத்திலும் விவாதங்களைத் தட்டியெழுப்பின. இராணுவத்தில் சேர்க்கப்பட்ட ஆண்கள் செய்து வந்த வேலைகளை - அவை நீண்ட காலமாகவே ஆண்களின் முற்றுரிமையாக இருந்தன - மிகையான சுரண்டல் நிலைமைகளின் கீழ் மிகவும் குறைந்த ஊதியம் கொடுத்துப் பெண்களைக் கொண்டு நிரப்பும் தேவை, பெண்களுக்கு வாக்குரிமை கோருவதற்காகப் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட இயக்கத்தின் கணிசமான பகுதியிடையே தேசிய வெறிக் கருத்துநிலை பரவுவதை ஊக்குவித்தது. அந்த இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்களிற் சிலர், ஆயுதப்படைகளில் பெண்களையும் சேர்க்க அனுமதிக்கும் சட்டங்களைக் கொண்டுவர விண்ணப்பிக்கும் அளவுக்கும்கூட சென்றனர். வாயிலுக்கு அருகே நின்றுகொண்டிருக்கும் எதிரியைக் காட்டி அடிப்படையான சமூக சீர்திருத்தங்களைக் குறைப்பதற்காகப் போரைப் பயன்படுத்தும் மோசடித்தனமான அரசாங்கங்களை அம்பலப்படுத்தியது, அன்றிருந்த முக்கியமான பெண் கம்யூனிஸ்ட் தலைவர்களின் முக்கியமான சாதனைகளிலொன்றாகும். க்ளாரா ஸெட்கின், அலெக்ஸாண்ட்ரா கொல்லந்தாய், சில்வியா பாங்கர்ஸ்ட்• மற்றும் ரோஸா லுக்ஸம்பர்க் ஆகியோர், இராணுவவாதத்திற்கு எதிராகப் போராடுவது, ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் இன்றியமையாதது என்பதை அடுத்தடுத்த தலைமுறையினருக்குக் காட்டும் பாதையில் தெளிவாகவும் துணிச்சலாகவும் முதன்முதலில் இறங்கியவர்களில் அடங்குவர். பின்னாளில், போரை நிராகரித்தல் என்பது சர்வதேசப் பெண்கள் நாளின் தனிச்சிறப்பான பகுதியாயிற்று. புதிய போர் ஏதும் மூள்கையில் போருக்கான வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்தல் என்பது சர்வதேசப் பெண்கள் இயக்கத்தின் பல்வேறு மேடைகளில் முதன்மையான அம்சமாகியது.

இலக்கு வழிமுறைகளை நியாயப்படுத்துவதில்லை, தவறான வழிமுறைகள் இலக்குக்கு சேதம் விளைவிக்கும்

புரட்சியாளர்களுக்கும் சீர்திருத்தவாதிகளுக்குமிடையே ஏற்பட்ட ஆழமான பிளவு, சோவியத் யூனியன் தோன்றியதற்குப் பிறகு மூலோபாயத்தில்

• **க்ளாரா ஸெட்கின் (Clara Zetkin: 1857-1933)** : ஜெர்மன் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்; பெண்ணிலைவாதி; **அலெக்ஸாண்ட்ரா கொல்லந்தாய்** (Alexandra Kollantai: 1872-1952): ரஷிய போல்ஷ்விக் புரட்சியாளர், பெண்ணிலைவாதச் சிந்தனையாளர்: **சில்வியா பாங்கர்ஸ்ட்** (Sylvia Pankhurst (1882 - 1960: இங்கிலாந்தில் பெண்களின் வாக்குரிமைக்காகப் போராடிய சோசலிஸ்ட் களப்பணியாளர், பெண்ணியச் சிந்தனையாளர்; பின்னாளில் இடது கம்யூனிஸ்டாகவும் பாசிச எதிர்ப்புப் போராளியாகவும் செயல்பட்டவர்.

ஏற்பட்ட பிளவாக விரிவடைந்தது. அந்தப் பிளவும் 1920களிலும் 1930களிலும் ஏற்பட்ட வறட்டுவாதக் கருத்துநிலையின் வளர்ச்சியும் இராணுவவாதத்திற்கு எதிராக மூன்றாம் அகிலத்துக்கும் (1919-1943)• ஐரோப்பிய சோசலிச, சோசலிச ஜனநாயகக் கட்சிகளுக்குமிடையே எவ்விதக் கூட்டணியும் ஏற்படுவதை நிராகரித்தன. போரை ஆதரித்ததன் காரணமாகத் தொழிலாளர் மற்றும் சோசலிச அகிலத்தை (Labour and Socialist International [1923-1940] சேர்ந்த கட்சிகள் கம்யூனிஸ்டுகளின் கண்களில் மதிப்பிழந்து போயிருந்தன. "ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்றுதல்" என்ற லெனினியக் கருத்து மாஸ்கோவில் இன்னும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அங்கிருந்த முன்னணித் தலைவர்களும் கோட்பாட்டாளர்களும் "புதிய 1914" தவிர்க்க முடியாதது என்று எண்ணிக்கொண்டிருந்தனர். இரு பக்கத்திலும், ஒரு புதிய போர் வெடிக்குமானால் என்ன செய்வது என்பதுதான் அதிகம் பேசப்பட்டு வந்ததேயன்றி அந்தப் போரைத் தொடக்கத்தி லிருந்தே எப்படித் தடுப்பது என்பதல்ல. அப்போது உருவாக்கப்பட்ட முழக்கங்களும் கோட்பாட்டு அறிக்கைகளும் எது நிகழும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அதிலிருந்தும், எது அரசியல் நடவடிக்கையாக ஆயிற்றோ அதிலிருந்தும் கணிசமாக வேறுபட்டிருந்தன. கம்யூனிஸ்ட் முகாமில் விமர்சனக் கண்ணோட்டத்தோடு எழுந்த குரல்களில் நிகோலாய் புகாரினின் குரலும் ஒன்று. "சமாதானத்துக்கான போராட்டம்" என்ற முழக்கத்தின் ஆதரவாளரான அவர், அதுதான் நடப்புக்கால உலகின் முக்கிய பிரச்சினைகளிலொன்று" என மேலதிக உறுதியோடு கருதிய ரஷியத் தலைவர்களில் ஒருவர்; அனைத்து வல்லரசுகளும் போருக்கு சரிசமமான அளவில் பொறுப்பானவையல்ல என்று வாதிட்ட ஜார்ஜி டிமிட்ரோவ், இராணுவவாதத்திற்கு எதிராகப் பரந்த மக்கள் முன்னணியைக் கட்டுவதற்கு சீர்திருத்தவாதக் கட்சிகளுடன் இணங்கிப் போவதை ஆதரித்தார். இந்த இரண்டு கருத்துகளும் சோவியத் வைதிக வாதத்தின் மந்திர உச்சாடனங்களிலிருந்து வேறுபட்டிருந்தன. அந்த உச்சாடனம், கோட்பாட்டுவகைப்பட்ட பகுப்பாய்வை அந்தந்த காலகட்டத்துக்கு ஏற்ப வளர்த்தெடுக்காமல் போர் அபாயம் என்பது,

• **மூன்றாம் அகிலம்** (Third International or Third International Working Men's Association): 1918ஆம் ஆண்டில் லெனினால் தோற்றுவிக்கப்பட்ட இந்த அமைப்பு, உலகெங்குமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளை ஒன்றிணைப்பதையும், அந்தந்த நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளுக்கு உதவுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால் ஸ்டாலின் ஆட்சிக்காலத்தில் அதன் முதன்மை நோக்கம் சோவியத் யூனியனைப் பாதுகாத்தல் என்பதாக மாறியதுடன், பிற நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் மீது கோட்பாட்டுரீதியாக ஆதிக்கம் செலுத்தக்கூடியதாகியது.

எல்லா ஏகாதிபத்திய அரசுகளிடமிருந்தும் வந்துகொண்டிருப்பதாகக் கருதியது.

இந்த விஷயத்தில் மா சேதுங்கின் கருத்துகள் முற்றிலும் வேறுபட்டிருந்தன. ஜப்பானியப் படையெடுப்புக்கு எதிரான விடுதலை இயக்கத்தின் தலைவர் என்ற முறையில் 'நீடித்த யுத்தம் பற்றி' (On Protracted War [1938]) என்ற கட்டுரையில் அவர் கூறினார்: கம்யூனிஸ்டுகள் செயலூக்கத்துடன் பங்கேற்றாக வேண்டிய "நியாயமான போர்கள்[27], பிரமாண்டமான சக்தியைத் தங்களுக்குள் கொண்டிருக்கின்றன; அந்த சக்தியால் பல விஷயங்களை மாற்றியமைக்க முடியும் அல்லாது அவற்றில் ஏற்படும் மாற்றத்துக்கான பாதையைச் செப்பனிட்டுக் கொடுக்க முடியும்".[28] ஆகவே மாவோ முன்மொழிந்த மூலோபாயம்: "நியாயமான போரைக்கொண்டு நியாயமற்ற போரை எதிர்ப்பதும்", மேலும், "அந்தப் போரின் குறிக்கோள் அடையப்பெறும் வரை அதைத் தொடர்ந்து நடத்துவதும் ஆகும்".[29] 'போர் மற்றும் மூலோபாயப் பிரச்சினைகள்' (Problems of War and Strategy [1938] என்ற அவரது நூலில் "புரட்சிகரப் போரின் அனைத்து வல்லமை" பற்றிய விவாதம் தொடர்கிறது. "பீரங்கிகளைக் கொண்டு மட்டுமே உலகம் முழுவதையும் மாற்றியமைக்க முடியும்"[30] என்றும், ஆயுதப் படையைக் கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றுவது, பிரச்சினையைப் போரின் மூலம் தீர்ப்பது புரட்சியின் மையக் கடமையும் அதன் உச்சகட்ட வடிவமும் ஆகும்" என்று அக்கட்டுரையில் மாவோ கூறுகிறார்.[31]

ஐரோப்பாவில், உள்நாட்டளவிலும் வெளிநாட்டளவிலும் நாஜி-பாசிஸ்ட் அணியின் அதிகரித்து வந்த வன்முறையும், இரண்டாம் உலகப் போர் (1939-1945) மூண்டதும் 1914-18ஆம் ஆண்டுக் காலப் போரைக் காட்டிலும் தீமை கூடியிருந்த சூழலை உருவாக்கியிருந்தது. சோவியத் யூனியன் மீது ஹிட்லரின் துருப்புகள் 1941இல் தாக்குதல் தொடுத்த பிறகு, நாஜிகள் தோற்கடிக்கப்படுவதில் முடிவடைந்த மாபெரும் தேசப் பற்றுப் போர், ரஷிய தேசிய ஒற்றுமையின் மையக்கூறாக, பெர்லின் சுவர் தகர்ந்து விழுந்த பிறகும், நம் காலம் வரையிலும் நீடித்திருந்தது.

27. Mao Tse-Tung, *On Protracted War*, Peking: Foreign Languages Press, 1966, p. 15.
28. Ibid, p. 26-27
29. Ibid, p. 53.
30. Mao Tse-Tung, 'Problems of War and Strategy', in *Selected Works of Mao-Tse-Tung*, Peking: Foreign Languages Press, 1965, vol 2, p. 219.
31. Ibid, p. 225.

போருக்குப் பிறகு உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிவுபட்டதும், சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முக்கிய கடமை சோவியத் யூனியனைக் காப்பாற்றுவதுதான் என்று ஜோசப் ஸ்டாலின் கற்பித்து வந்தார். கிழக்கு ஐரோப்பாவில் உருவாக்கப்பட்ட, எட்டு நாடுகளைக் கொண்ட (யூகோஸ்லேவியா அவற்றிலிருந்து விலகிச் சென்ற பிறகு ஏழு நாடுகளைக் கொண்ட), மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடைப்பட்ட பாதுகாப்பு மண்டலம், மேற்சொன்ன கொள்கையின் மையத் தூணாக அமைந்தது. அதே காலகட்டத்தில் ட்ரூமன் கொள்கை (Truman Doctrine)• புதிய வகையான போரின் - கெடுபிடிப் போரின் (Cold War)≠ வருகையைக்

• **ட்ரூமன் கொள்கை (Truman Doctrine)**: *1945* முதல் *1953* வரை அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த ஹாரி எஸ்.ட்ரூமன் (Harry S.Truman) உருவாக்கிய கொள்கை; இதன்படி, உலகிலுள்ள எல்லா ஜனநாயக நாடுகளுக்கும், அவற்றுக்கு உள்ளேயிருந்தோ வெளியேயிருந்தோ எதேச்சாதிகார (சர்வாதிகார) சக்திகளிடமிருந்து - அதாவது கம்யூனிஸ்ட் கட்சிகளிடமிருந்தும் கம்யூனிஸ நாடுகளிலிருந்தும் வரும் அச்சுறுத்தலை முறியடிப்பதற்காக அரசியல், இராணுவ, பொருளாதார உதவிகளை அமெரிக்க அரசாங்கம் கொடுக்கும் என்ற கொள்கை.

≠ **கெடுபிடிப் போர் (Cold War)**: இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு, உலகை மறு சீரமைப்பதில் அமெரிக்க முகாமுக்கும் சோவியத் முகாமுக்கும் வெவ்வேறு குறிக்கோள்களும் வெவ்வேறு நலன்களும் இருந்தன. இதன் காரணமாக இரு முகாம்களுக்கிடையே கெடுபிடிப் போர் (Cold War) *1945* முதல் *1990* வரை நீடித்தது. *(1950-1980*களில் தமிழ் வாசகர்களுக்கு சர்வதேச அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றை மிக எளிமையாக அறிமுகப்படுத்தி வந்த ஏ.என்.சிவராமன் போன்றவர்கள் 'Cold War' என்பதற்கு 'கெடுபிடிப் போர்' என்னும் பதத்தைப் பயன்படுத்தினர். அந்த நிகழ்ச்சிப்போக்கின் பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கக்கூடிய பதம் இது. 'பனிப் போர்' என்பது 'Cold War' என்பதன் நேரடி (literal) மொழிபெயர்ப்பு. தற்சமயம் 'விண்வெளிப் போர்' என்னும் பொருளைத் தருகின்ற 'Star War' என்பது 'நட்சத்திரப் போர்' என்று மொழியாக்கம் செய்யப்படுகிறது. எனவே, மூலச் சொற்களில் பொதிந்துள்ள உட்பொருளைப் புரிந்துகொண்டு தமிழ்ச் சொல்லாக்கங்கள் செய்யப்பட வேண்டும். 'கெடுபிடிப் போர்' என்பது நாடுகளுக்கிடையே நடத்தும் நேரடியானதும் இராணுவரீதியானதுமான போர் அல்ல, இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய நிலைமைகளில், உலகில் கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதற்காக அமெரிக்காவின் தலைமையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானும் சோவியத் யூனியனின்பாலும் பிற சோசலிச நாடுகளின்பாலும் கடைப்பிடித்த கொள்கை. இக் கொள்கையின் முக்கிய அம்சங்கள்: 1. வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகள் சமாதான சகவாழ்வு நடத்துதலை நிராகரித்தல்; 2.சர்வதேசச் சூழ்நிலைமைகளைக் கடுமையானதாக்கி இதர நாடுகளில் சோவியத் யூனியனைச் சுற்றி இராணுவக் கூட்டணிகளை ('நேட்டோ') போன்றவை உருவாக்குதல்; 3. ஆயுதப் போட்டி; 4. பேரழிவை உண்டாக்கும் ஆயுதங்களைப் பயன்படுத்திப் போர் தொடுக்கப்போவதாக அச்சுறுத்துவதும் மிரட்டுவதும்; 5. உலகப் பொருளாதாரத் தொடர்புகளைச் சீர்குலைத்தல்; 6.பிற →

குறித்தது. கிரீஸ் நாட்டில் கம்யூனிஸ்ட் விரோத சக்திகளுக்குத் தரப்பட்ட ஆதரவு, மார்ஷல் திட்டம் (The Marshall Plan [1948])≈,

←நாடுகளின் இறையாண்மையைத் தகர்த்தல்; 7. பொம்மை அரசாங்கங்களை நிறுவுதல்; 7. கம்யூனிசத்திற்கெதிரான பண்பாட்டு, பிரசார முயற்சிகளை மேற்கொள்ளுதல். 8. உளவு வேலைகளை மேற்கொள்ளுதல்; 9. விண்வெளி ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல்; 10. உலகில் தத்தம் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்கான முயற்சியில், மாற்று முகாமில் உள்ள நாடுகளிலோ, அல்லது அதன் செல்வாக்கு, நட்பு ஆகியவற்றின் கீழுள்ள நாடுகளிலோ சில இயக்கங்கள், குழுக்கள் ஆகியவற்றுக்கு இராணுவ, நிதி, அரசியல் உதவிகளை வழங்கி இயக்கங்கள், அந்த நாடுகளிலுள்ள அரசுகளுக்கு எதிராகப் போர் புரிய வைத்தல் (இது மாற்றாள் போர் [proxy war] என்றழைக்கப்படுகிறது) அல்லது ஆட்சிக்கவிழ்ப்பு வேலைகளைத் தூண்டிவிடுதல்.சோவியத் யூனியனும் தன் பங்கிற்கு கம்யூனிசக் கருத்துகளைப் பரப்புவதற்காக ஏராளமான நூல்களையும், பிற பிரசார சாதனங்களையும் உருவாக்கியது. கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளுடன் சேர்ந்து 'வார்ஸா ஒப்பந்தம்' என்னும் இராணுவக்கூட்டமைப்பை உருவாக்கியது. எனினும் இவற்றை சோவியத் முகாம் மேற்கொண்ட தற்காப்பு நடவடிக்கைகள் என்றே சொல்ல வேண்டும். 1991ஆம் ஆண்டு இறுதியில் சோவியத் யூனியன் தகர்ந்த பிறகு 'கெடுபிடிப் போர்' முடிவுக்கு வந்துவிட்டது என்று சொல்லப்பட்டாலும், அமெரிக்கா, ஜப்பான், நேட்டோ நாடுகள் ஆகியன இப்போதுள்ள ரஷியா, சீனா, கியூபா, வெனிசுவேலா போன்ற நாடுகளுக்கு எதிராக அப்போரை நடத்தி வருகின்றன.

≈ **மார்ஷல் திட்டம் (The Marshall Plan [1948]):** இரண்டாம் உலகப் போரின் காரணமாகப் பெரும் பொருளாதார அழிவுகளைச் சந்தித்திருந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தை மீட்டுக் கொண்டுவருவதற்காக உருவாக்கப்பட்ட திட்டம் (European Recovery Program-ERP). அத்திட்டத்தை உருவாக்க முன்முயற்சி எடுத்துக்கொண்டவர் அன்றைய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜார்ஜ் மார்ஷல். எனவே அத் திட்டம் 'மார்ஷல் திட்டம்' என்று அழைக்கப்பட்டது. உலகப் போரில் அனைத்து மேற்கு ஐரோப்பிய நாட்டுப் பொருளாதாரங்களும் நசிந்திருக்க, அமெரிக்கப் பொருளாதாரம் மட்டுமே விரைவான வளர்ச்சியடைந்திருந்தது. அதற்குக் காரணம் பேர்ல் துறைமுகத்தின் மீது ஜப்பானியர்கள் நடத்திய திடீர்த் தாக்குதலைத் தவிர வேறு எந்த இராணுவத் தாக்குதலும் எதிர் நாடுகளால் அதன் மீது நடத்தப்படவில்லை. ஐரோப்பாவை மறு நிர்மாணம் செய்வதற்கான இத் திட்டத்தை உருவாக்குவதற்கு 1947 முதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதுதொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு வருமாறு சோவியத் யூனியனுக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், அத் திட்டம் சோசலிச நாடுகளுக்கு அமெரிக்காவிலிருந்து வரும் அச்சுறுத்தலாகும் என்று ஸ்டாலின் கருதியதால் அந்த நாடுகள் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவில்லை. 1947 ஜூலை முதல் நான்கு நிதியாண்டுகளுக்கு அமல்படுத்தப்பட்ட அத்திட்டம் ஐரோப்பிய நாடுகளுக்கு 13 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள பொருளாதார, தொழில் நுட்ப உதவிகளை வழங்கியது. அத் திட்டக் காலம் முடிவடைகையில் மேற்கு ஜெர்மனியைத் தவிர மற்ற எல்லா மேற்கு ஐரோப்பிய நாடுகளுமே உலகப் போருக்கு முந்தைய பொருளாதார வளர்ச்சி நிலையை அடைந்திருந்தன. அதே சமயம், இந்த நாடுகள் அமெரிக்காவின் உற்பத்திப் பொருள்களுக்கான பரந்த→

நேட்டோவின்• உருவாக்கம் (1949) ஆகியவற்றின் மூலம் அமெரிக்கா மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முற்போக்கு சக்திகளின் வளர்ச்சியைத் தடுப்பதற்கான பங்களிப்பை வழங்கியது. அவற்றுக்கு எதிர்வினையாக சோவியத் யூனியன் வார்ஸா ஒப்பந்தத்தை (Warsaw Pact [1955])⊗ உருவாக்கியது. இந்த ஏற்பாடு மிகப் பெருமளவிலான ஆயுதப் போட்டிக்கு வழிவகுத்ததுடன், ஹிரோஷிமாவும் நாகசாகியும் இன்னும் நம் நினைவில் பசுமையாக இருந்து வந்துள்ளபோதிலும், அணு ஆயுத சோதனைகள் பெருகவும் செய்தன.

1961 முதல் நிகிடா குருஷ்சேவின் தலைமையின் கீழ், சோவியத் யூனியன் "சமாதான சகவாழ்வு" என்றழைக்கப்பட்ட புதிய அரசியல் மார்க்கத்தைத் தொடங்கியது. பிற நாட்டு விவகாரங்களில் தலையிடாமை, தேசிய இறையாண்மையை மதித்தல், முதலாளிய நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்கு அழுத்தம் கொடுத்த இந்த அரசியல் மாற்றம், மூன்றாம் உலகப் போர் அபாயத்தைத் தவிர்க்கக்கூடியதாக இருக்கும் (1962இல் கியூப ஏவுகணை

←சந்தையாக மாறின. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் கணிசமான செல்வாக்குடன் இயங்கி வந்தன. பிரான்ஸிலும் இத்தாலியிலும் நாஜிசத்திற்கும் பாசிசத்திற்கும் எதிரான போராட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகள் முன்னணிப் பாத்திரம் வகித்தன. எனவே இந்த நாடுகளில் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்துவிடுவார்கள் என்னும் அச்சமும் அமெரிக்காவிடம் இருந்தது. இந்த அச்சத்தைப் போக்குவதற்கும் சோவியத் யூனியனின் செல்வாக்குப் பரவாமல் தடுப்பதற்கும் மார்ஷல் திட்டம் பயன்பட்டது.

• **நேட்டோ (North Atlantic Treaty Organisation-NATO):** 1949இல் அமெரிக்காவில் ஹாரி எஸ்.ட்ரூமனின் முன்முயற்சியின் பேரில் தொடக்கத்தில் 12 நாடுகளை உறுப்பினர்களைக் கொண்டு இந்த அமைப்பு சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளின் 'ஆக்மிரமிப்பை'யும் 'விஸ்தரிப்பையும்' தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது. பெல்ஜியம் தலைநகர் பிரெஸ்ஸெல்ஸைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படும் இந்த அமைப்பு, சோவியத் யூனியன் தகர்ந்து விழுவதற்கு முன், அந்த நாட்டுக் குடியரசுத் தலைவர் மிகெய்ல் கொர்பச்செவுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி இன்றைய ரஷியாவைச் சுற்றிலுமுள்ள பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் புதிய உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டதுடன், உக்ரைனையும் சேர்ப்பதற்கான முயற்சிகளைத் தொடங்கி அந்த நாட்டிற்கு 2014 முதல் இராணுவ உதவிகளையும் பயிற்சிகளையும் வழங்கி, ரஷியாவை அச்சுறுத்தத்தொடங்கியது. இதுவே, விளாதிமிர் புதினின் ரஷியா, உக்ரைன் மீது படையெடுத்ததற்குக் காரணமாகியது.

⊗ **வார்ஸா ஒப்பந்தம் (Warsaw Pact [1955])** : நேட்டோ நாடுகளின் அச்சுறுத்தலுக்கு எதிராக 1955இல் போலந்து தலைநகரம் வார்ஸாவில் சோவியத் யூனியனுக்கும் ஏழு மத்திய, கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட இராணுவ ஒப்பந்தம். 1991இல் சோவியத் யூனியனின் தகர்வுடன் இந்த ஒப்பந்தமும் காலாவதியாகிவிட்டது. ஒன்றிணைவு காரணமாக கிழக்கு ஜெர்மனி, அதற்கு முன்பே அதிலிருந்து விலகிவிட்டது.

நெருக்கடிகள்[∇] மூன்றாம் உலகப் போருக்கான சாத்தியப்பாடொன்று இருந்ததைச் சுட்டிக் காட்டின) என்று கருதச் செய்ததுடன், போர் தவிர்க்க முடியாதது அல்ல என்ற வாதத்தை ஆதரித்தது. ஆனால், ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு என்ற இந்த முயற்சி அமெரிக்கா தொடர்பாக மட்டுமே கடைப்பிடிக்கப்பட்டதேயன்றி, "யதார்த்தத்தில் நிலவிய சோசலிசம்" இருந்த நாடுகளுக்கு அல்ல. 1956இல் சோவியத் யூனியன், ஹங்கேரியில் தோன்றிய கிளர்ச்சியை ஏற்கெனவே ஒடுக்கியிருந்தது. சோசலிச முகாமைக் காப்பாற்றுதல் என்ற பெயரில் மேற்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்த இராணுவத் தலையீட்டை நியாயப்படுத்தின; அதைக் கண்டனம் செய்யவில்லை. எடுத்துக்காட்டாக, "நம் தரப்பு தவறு செய்திருந்தாலும் நாம் அதனுடனேயே நிற்போம்" என்று இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பல்மிரோ டோல்யாட்டி அறிவித்தார்.[32] இந்த நிலைப்பாட்டைப் பகிர்ந்துகொண்டவர்களில் பெரும்பாலோர், சோவியத் இராணுவ நடவடிக்கையின் பேரழிவுமிக்க விளைவுகளைப் புரிந்துகொண்ட போது, அந்த நிலைப்பாட்டை மேற்கொண்டதற்காக மிகவும் வருந்தினர்.

சமாதான சகவாழ்வு உச்சகட்டத்தில் இருந்தபோதும், 1968இல் செக்கோஸ்லோவாகியாவில் இதுபோன்ற நிகழ்வுகள் நடந்தன. 'ப்ராக் வசந்த காலத்'தின்போது ஜனநாயகப்படுத்துதல், பொருளாதார அதிகாரப் பரவல் ஆகிய கோரிக்கைகளை எதிர்கொண்ட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பிரோ, ஐந்து இலட்சம் துருப்பு களையும் ஆயிரக்கணக்கான டாங்கிகளையும் அனுப்ப ஒருமனதாக முடிவு செய்தது. 1968இல் நடந்த போலந்து ஐக்கிய தொழிலாளர் கட்சியின் (Polish United Workers' Party) மாநாட்டில் பேசிய லியோனிட் ப்ரெஷ்னெவ், வார்ஸா ஒப்பந்த நாடுகளுக்குள்ள 'வரம்புக்குள்பட்ட இறையாண்மை' என்பதைச் சுட்டிக்காட்டி, செக்கோஸ்லோவாகியா மீதான சோவியத் இராணுவ நடவடிக்கைக்கு விளக்கம் கூறினார்:

∇ **கியூப ஏவுகணை நெருக்கடிகள் (Cuban Missile Crisis)**: சோவியத் யூனியனில் நிகிடா குருஷ்சேவின் ஆட்சியின்போது ஏவுகணைகளை அமெரிக்கா மீதும் ஏவும் தளமொன்று கியூபாவில் ஏற்படுத்தப்பட்டது. இதைத் தடுப்பதற்காக அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் ஜான் எஃப். கென்னடி, கியூபாவை அமெரிக்கக் கப்பற் படை முற்றுகையிடும்படி செய்ததுடன் அமெரிக்காவின் யு-2 உளவு விமானத்தையும் கியூப வான்பகுதிக்கு அனுப்பிவைத்தார். இது இரு வல்லரசுகளிடையே பெரும் அணு ஆயுதப் போர் மூளும் அபாயத்தை ஏற்படுத்தியது. பின்னர் சோவியத் யூனியன் கியூபாவில் ஏவுகணைத் திட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டதுடன், அந்த போர் மூளும் அபாயம் தடுக்கப்பட்டது.

32. Cit. in Albertina Vittoria, *Togliatti e gli intellettuali. La politica culturale dei comunisti italiani (1944-1964)*, Roma: Carocci, 2015, p. 219.

"சோசலிசத்திற்குப் பகையான சக்திகள் ஏதோவொரு சோசலிச நாட்டின் வளர்ச்சியை முதலாளியத்தை நோக்கித் திருப்ப முயன்றால், அது சம்பந்தப்பட்ட நாட்டின் பிரச்சினையாக மட்டுமல்லாது, பொதுவான பிரச்சினையாகவும் எல்லா சோசலிச நாடுகளுக்குமுள்ள அக்கறையாகவும் அமைந்துவிடும்". இந்த ஜனநாயக-விரோத தர்க்கத்தின்படி, எது சோசலிசம், எது 'சோசலிசம்' அல்லாதது என்பதற்கான வரையறை செய்வது இயல்பாகவே சோவியத் தலைவர்களின் தன்னிச்சையான முடிவுகளைச் சார்ந்ததாக இருந்தது. சோவியத் யூனியனின் நடவடிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்பதைப் புதிய இடதுசாரி இயக்கங்கள் மட்டுமல்லாது, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உள்பட பெரும்பாலான கம்யூனிஸ்ட் கட்சிகளின் கருத்தாக இருந்தபோதிலும், ரஷியர்கள் தங்கள் இராணுவத்தை அங்கிருந்து திரும்பப் பெறாதது மட்டுமல்ல, 'இயல்பு நிலை' என்று அவர்கள் கூறிய நிலைக்கு செக்கோஸ்லோவாகியாவைத் திரும்பக் கொண்டுவரும் நிகழ்முறையை மேற்கொண்டனர். சோவியத் யூனியன், தனது பொருளாதார மூலவளங்களின் கணிசமான பகுதியை இராணுவச் செலவுக்குத் தொடர்ந்து ஒதுக்கிவந்துகொண்டிருந்ததன் மூலம், சமுதாயத்தில் எதேச்சாதிகாரப் பண்பாட்டை வலுப்படுத்த உதவியது. இவ்வாறு அது சமாதான இயக்கத்தின் நல்லெண்ணத்தை என்றென்றைக்குமாக இழந்துவிட்டது. அந்த சமாதான இயக்கம், வியத்நாமில் நடந்துவந்த போருக்கு எதிராக அசாதாரணமான அளவில் மக்கள் அணி திரட்டப்பட்டதன் காரணமாக மேலும் பரந்து விரிந்ததாகியது.

அதற்கடுத்த பத்தாண்டுக் காலத்தில் நடந்த பெரும் போர்களிலொன்று, ஆப்கானிஸ்தான் மீது சோவியத் யூனியன் நடத்திய படையெடுப்புடன் தொடங்கியது. 1979இல் சோவியத் செஞ்சேனை, மீண்டும் மாஸ்கோவின் வெளியுறவுக் கொள்கையின் முக்கிய கருவியாகியது. அந்த வெளியுறவுக் கொள்கை, சோவியத் யூனியன் தனது சொந்த "பாதுகாப்பு வலையம்" என்று அதனால் வர்ணிக்கப்பட்ட பகுதியில் தலையிடுவதற்குத் தொடர்ந்து உரிமை கொண்டாடி வந்தது. அந்த அவப்பேறான முடிவு, பத்தாண்டுகளுக்கு மேலாக நீடித்ததும் ஏராளமான சாவுகளையும் இலட்சக்கணக்கான அகதிகளையும் உருவாக்கியதும் சோவியத் யூனியனுக்குச் சோர்வு தந்ததுமான சாகசமாக மாற்றப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கம், ஹங்கேரியிலும் செக்கோஸ்லோவாகியாவிலும் நடந்த சோவியத் படையெடுப்புகளுக்குக் காட்டிய எதிர்ப்பை ஒப்பிடுகையில் மிகக் குறைந்த அளவுக்கே தயக்கம் காட்டியது. எனினும், இந்தப் புதிய போரானது, "யதார்த்தத்தில் நிலவிய சோசலிசத்துக்கும்" சமாதானம், இராணுவவாதத்திற்கான எதிர்ப்பு

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட மாற்று அரசியலுக்குமிடையே இருந்த பிளவைப் பொதுமக்கள் அபிப்பிராயத்துக்கு முன்பைக் காட்டிலும் மேலும் தெளிவாகக் காட்டியது.

இந்த இராணுவத் தலையீடுகளை ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால், அவை பொதுவான ஆயுதக் குறைப்புக்கு எதிராகச் செயல் பட்டது மட்டுமல்ல; சோசலிசத்திற்கு அவப்பெயரை உண்டாக்கவும் உலகளவில் அதனை பலவீனப்படுத்துவதற்குமே சேவை புரிந்தது. கெடுபிடிப் போர் தொடங்கியதிலிருந்து அமெரிக்கா, பெரிதும் இரகசியமான முறையில் உலகெங்கும் இருபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் திடீர் வன்முறைக் கிளர்ச்சிகளுக்கு ஆதரவு அளித்தும், ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களைத் தூக்கியெறிய உதவியதுமான செயல்களை மேற்கொண்டதை ஒத்த வகையில் சோவியத் யூனியனும் ஒரு சாம்ராஜ்ய அரசைப் போலவே நடந்துகொண்டதாகவே அதிகரித்த அளவில் பார்க்கப்பட்டு வந்தது. கடைசியாக, 1977-1979ஆம் ஆண்டுகளில் சீன-சோவியத் மோதல் என்ற பின்புலத்தில் கம்போடியாவுக்கும் வியத்நாமுக்கும், சீனாவுக்கும் வியத்நாமுக்கும் நடந்த "சோசலிசப் போர்கள்", முதலாளியத்தின் பொருளாதாரரீதியான சமச்சீரின்மையே போர்களுக்கான பிரத்யேகமான காரணம் என விளக்குவதற்கு "மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட்" கருத்துநிலைக்கு• (அது மார்க்ஸும் எங்கெல்ஸும் உருவாக்கியிருந்த மூல அடிப்படைகளிலிருந்து தொலைவானதாக இருந்துவந்தது) இருந்து வந்த ஆற்றலைச் சிறிது சிறிதாக மறையச் செய்தது.

இடது பக்கம் இருப்பது, போருக்கு எதிராக இருப்பதே ஆகும்

கெடுபிடிப் போரின் முடிவு, மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதன் அளவைக் குறைக்கவோ, மக்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு விருப்பமான அரசியல் ஆட்சியின் கீழ் இருப்பதைத் தேர்ந் தெடுத்துக் கொள்ளும் சுதந்திரத்தை அதிகரிக்கவோ செய்யவில்லை. ஐ.நா. அவையின் ஓர் ஆணைகூட இல்லாமல் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் அமெரிக்காவால் நடத்தப்பட்ட, "மனிதாபிமானப் போர்கள்" என்று அபத்தமான முறையில் வரையறுக்கப்பட்ட ஏராளமான போர்கள் - இவற்றுடன் புதிய வகையான மோதல்கள், சட்ட விரோதமான பொருளாதாரத் தடைகள், அரசியல், பொருளாதார, ஊடகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் - இரு பெரும் வல்லரசுகளிடையே ஏற்பட்ட இருதுருவப் பிரிவினை, நவ தாராளவாத மந்திரமான "புதிய உலக அமைப்பு"

• இங்கே குறிப்பிடப்படுவது, ஸ்டாலின் ஆட்சிக்காலத்தில் வறட்டு சூத்திரமாக மாற்றப்பட்ட கருத்துநிலை. இதற்கும் லெனினுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

என்பதால் வாக்குறுதி தரப்பட்ட சுதந்திரமும் முன்னேற்றமும் நிலவுகிற யுகத்திற்கு வழிவிடவில்லை. இந்தச் சூழலில், இடதுசாரி விழுமியங்களுக்கு ஒருகாலத்தில் உரிமை கொண்டாடிவந்த பல அரசியல் சக்திகள் ஏராளமான போர்களில் பங்கேற்றன. கொசவோவிலிருந்து இராக், ஆப்கானிஸ்தான் வரை - பெர்லின் சுவர் தகர்ந்த பிறகு நேட்டோவால் நடத்தப்பட்ட ஒருசில போர்களை மட்டுமே சொல்வதானால் - இந்த முன்னாள் இடதுசாரி சக்திகள் ஒவ்வொரு முறையும் ஆயுதத் தலையீடுகளுக்குத் தங்கள் ஆதரவை வழங்கி வந்துள்ளதுடன், வலதுசாரி சக்திகளிலிருந்து தங்களை மேன்மேலும் குறைவாகவே இனம் பிரித்துக் காட்டும்படி செய்துள்ளன.

ரஷிய -உக்ரைன் போர், ஒரு நாட்டின் இறையாண்மை தாக்குதலுக்குள்ளாகும்போது எவ்வாறு எதிர்வினை புரிவது என்ற இரண்டக நிலையை இடதுசாரிகள் மீண்டும் எதிர்கொள்ளச் செய்துள்ளது. உக்ரைன் மீது ரஷியா நடத்தும் படையெடுப்பைக் கண்டனம் செய்யத் தவறியது வெனிசுவேலா அரசாங்கம் இழைத்துள்ள ஓர் அரசியல் தவறு. எதிர்காலத்தில் அமெரிக்கா நடத்தும் சாத்தியப் பாடுள்ள ஆக்கிரமிப்புச் செயல்கள் பற்றிய கண்டனங்கள் நம்பகத்தன்மை குறைந்தவையாகவே தோன்றுகின்றன. "வெளியுறவுக் கொள்கையைப் பொருத்தவரை, 'பிற்போக்குத்தனமானது', 'புரட்சிகரமானது" என்ற கவர்ச்சிகரமான, கவனத்தை ஈர்க்கிற சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் பலனெதையும் பெற முடியாது.

"வெளியுறவுக் கொள்கையில் அகநிலைரீதியாகப் பிற்போக்குத் தனமானதாக இருப்பது புறநிலையில் புரட்சிகரமானதாக இருக்கும் என்று மெய்ப்பிக்கப்படக்கூடும்" என்று ஃபெர்டினாண்ட் லஸ்ஸாலுக்கு• மார்க்ஸ் 1860இல் எழுதியது உண்மை

• **ஃபெர்டினாண்ட் லஸ்ஸால் (Ferdinand Lassalle)**: 1848ஆம் ஆண்டு பிரெஞ்சு புரட்சியில் பங்கேற்றவரும் ஜெர்மனியில் ஜனநாயக சோசலிசக் கட்சியை (Democratic Socialist Party) நிறுவியவருமான லஸ்ஸால், மார்க்ஸியத்தைக் கடுமையாக எதிர்த்து வந்தார். 'பூர்ஷ்வா ஜனநாயகம்', எல்லாத் தனிமனிதர்களும் தமது உற்பத்தியாற்றலை வரம்பேதுமின்றி வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பை உத்தரவாதம் செய்துள்ளது என்றும், தொழிலாளர்கள், அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாக விளங்க வேண்டும் என்றும் கருதினார். தொழிலாளர்கள் ஒன்றுபட்ட சமூக வாழ்க்கை, பொதுவான நலன்கள், ஒன்றுக்கொன்று பயன்படக்கூடிய அக்கறைகள் ஆகியவற்றைக் கொண்டிருப்பதால், தொழிலாளர்களின் இலட்சியமே சமுதாயத்தின் இலட்சியமாக இருக்கும் என்றும், தொழிலாளிகள் அரசியல் மேலாதிக்கத்தைப் பெறுவார்களேயானால், சமுதாயத்தில் மிக மேம்பட்ட ஒழுக்க நெறிகள், அறிவியல் வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி ஆகியன→

தான்.[33] ஆனால், இருபதாம் நூற்றாண்டு அனுபவங்களினூடாக "என்னுடைய எதிரியின் எதிரியுடன்" நேச அணி பூணுவது பலசமயம் எதிர்பார்த்த விளைவுகளுக்கு மாறான விளைவுகளை உண்டாக்கும் உடன்பாடுகளுக்கு இட்டுச் செல்லும் என்பதை இருபதாம் நூற்றாண்டு அனுபவங்களிலிருந்து - அதிலும் குறிப்பாக, நம் காலத்தில், முற்போக்கு அணி பலவீனமானதாகவும் கோட்பாட்டுரீதியாக குழப்பமடைந்திருப்பதாகவும், அணிதிரட்டப்பட்ட வெகுமக்களின் ஆதரவு இல்லாமல் இருப்பதாகவும் இருக்கும் சூழலில் - கற்றுக் கொண்டிருந்திருக்க வேண்டும். இங்கு 'சோசலிசப் புரட்சியும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையும்' என்ற நூலில், லெனின் கூறியதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்: "ஒரு ஏகாதிபத்திய அரசுக்கு எதிராக நடத்தப்படும் தேசிய விடுதலைப் போராட்டம், சில குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் அந்த ஏகாதிபத்திய அரசுக்குள்ளவை போன்ற சரிசமமான ஏகாதிபத்திய நலன்களைக் கொண்ட மற்றொரு "பெரும்" வல்லரசால் பயன்படுத்தப்படக் கூடும் என்ற உண்மை, தேசங்களின் சுய நிர்ணய உரிமையைக் கைவிடுவதற்கு சோசலிச ஜனநாயகத்தைத் தூண்டிவிடச் செய்வதற்கான காரணமாக இருக்க முடியாது".[34]

வழக்கமாகக் காணப்படும் புவிசார் அரசியல் நலன்களையும் சூழ்ச்சிகளையும் தாண்டி இடதுசாரி சக்திகள் வரலாற்றுரீதியாகவே

←உருவாகும் என்றும் கூறிய அவர் 'அரசு' என்பது எல்லாக் குடிமக்களுக்கும் உரிமைகளையும் நீதியையும் வழங்கும் கருவி என்று கருதினார். மனித குலத்திற்குக் கல்வி வழங்குவதும் தன்னுரிமையை வளர்ப்பதும் அரசின் பணியாகும் என்று கூறிய அவர், பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கைகளுக்கு அரசு செவிமடுக்குமாதலால் புரட்சி தேவையில்லை என்றார். ஃபெர்டினாண்ட் லஸ்ஸாலால் பரப்பப்பட்டு வந்த 'கூலி விகிதத்தின் இறுக்கமான விதி' என்னும் கருத்தின்படி கூலியை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எல்லாம் வீண் முயற்சிகளே; அவை, அரசில் தொழிலாளர்கள் அரசியல் அதிகாரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்னும் முதன்மையான கடமையிலிருந்து திசை திருப்புகின்றவை. தொழிலாளர்களின் உண்மை ஊதியம் எப்போதுமே நீண்டகாலப் போக்கில் அவர்கள் உயிர் பிழைத்திருக்க மட்டுமே போதுமான அளவுக்குக் குறைந்து விடும் என்பதுதான் 'கூலி விகிதத்தின் இறுக்கமான விதி' (Iron Law of Wages).

33. Karl Marx to Ferdinand Lassalle, 2 June 1860, in MECW, vol. 41, p. 154. Cf. Marcello Musto, *Another Marx: Early Manuscripts to the International*, London: Bloomsbury, 2018, p. 132.

34. Vladimir I. Lenin, *The Socialist Revolution and the Right of Nations to Self-Determination*, in Lenin, *Collected Works*, Moscow: Progress Publishers, 1964, vol. 22, p. 14

தேசிய சுய நிர்ணயம் என்ற கொள்கைக்கு ஆதரவளித்து வந்துள்ளதுடன், தனிப்பட்ட நாடுகள் தங்கள் நாட்டு மக்களின் தெளிவான விருப்பத்தின் அடிப்படையில் நாட்டு எல்லைகளை வகுத்துக் கொள்வதையும் ஆதரித்து வந்துள்ளனர். இடதுசாரிகள் போர்களுக்கு எதிராகவும் பிற நாடுகளின் பகுதிகளைத் தங்கள் நாட்டுடன் "இணைத்துக் கொள்வதற்கு" எதிராகவும் போராடி வந்துள்ளனர்.

அதற்குக் காரணம், போர்களும் "இணைத்துக்கொள்வதும்" ஆதிக்க தேசத்திலுள்ள தொழிலாளிகளுக்கும் ஒடுக்கப்படும் தேசத்திலுள்ள பாட்டாளிகளுக்குமிடையே பாரதூரமான முரண்பாடுகளை உருவாக்கி, ஒடுக்கப்படும் தேசத்திலுள்ள பாட்டாளிகள், ஒடுக்கும் தேசத்திலுள்ள பாட்டாளிகளைத் தங்கள் எதிரியாகக் கருதி, தங்கள் சொந்த நாட்டு பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஐக்கியப்படுகின்ற நிலைமைகளை உருவாக்கி விடும். "சுயநிர்ணய உரிமை பற்றிய விவாதத்தின் விளைவுகள் (Results of the Discussion on Self-Determination [1916]) என்ற கட்டுரையில் லெனின் கூறினார்: "பெட்ரோகிராட், பெர்லின், வார்ஸா ஆகியவற்றில் சோசலிசப் புரட்சி வெற்றியடையுமானால், போலந்து நாட்டு சோசலிஸ்ட் அரசாங்கம், ரஷிய, ஜெர்மன் சோசலிஸ்ட் அரசாங்கங்கள் போலவே, எடுத்துக்காட்டாக, உக்ரைனியர்களைப் போலந்து அரசின் எல்லைகளுக்குள் கட்டாயப்படுத்தி வைத்திருப்பதைக் கைவிடும்".[35] ஆகவே, மேற்சொன்னதிலிருந்து வேறுபட்ட நிலைப்பாட்டை புதினின் தலைமையிலுள்ள தேசியவாத அரசாங்கத்தின்பால் மேற்கொள்ள வேண்டும் என்ற ஆலோசனை சொல்லப்படுவது ஏன்?

ஒருபுறம், இடதுசாரி இயக்கத்திலுள்ள பலர் - நேரடியாகவோ மறைமுகமாகவோ - போர்புரிபவர்களின் சக போராளிகளாகும் ஆசைக்கு மயங்கி, ஒரு புதிய புனித ஐக்கியத்துக்கு எண்ணெய் வார்க்கிறார்கள்.• இன்று அத்தகைய நிலைப்பாடு, அட்லாண்டிசிசத்திற்கும்≈ போர்

35. Vladimir I. Lenin, *Results of the Discussion on Self-Determination,* in Lenin, *Collected Works,* Moscow: Progress Publishers, 1964, vol. 22, pp. 329-330.

• **'புனித ஐக்கியம்' [union sacrée]** : *1914*இல் பிரான்ஸில் உருவாக்கப்பட்ட சொற்றொடர். அது, முதல் உலகப் போர் மூண்டதும், பிரெஞ்சு இடதுசாரிகள் தங்கள் கொள்கைகளைக் கைவிட்டு பிரெஞ்சு அரசாங்கம் மேற்கொண்ட போர் முயற்சிகளுக்கு ஆதரவு அளித்ததைக் கிண்டல் செய்வதற்காக உருவாக்கப்பட்ட சொற்றொடர்.

≈ **அட்லாண்டிசிசம் (Atlanticism)**: அமெரிக்காவுக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குமுள்ள நெருக்கமான உறவுக்கு, அல்லது குறிப்பாகச் சொல்லப்போனால் நேட்டோவுக்கு அளிக்கப்படும் ஆதரவு.

எதிர்ப்பு சமாதானவாதத்திற்கும் இடையிலான வேறுபாடு மேன் மேலும் மங்கிவரச் செய்வதற்கே பணிபுரியும். முற்போக்கு சக்திகள் போரை எதிர்க்காவிட்டால், அவர்களின் இருப்புக்கான நியாயத்தின் இன்றியமையாப் பகுதியொன்றை இழந்துவிடுவதுடன், எதிர் முகாமின் கருத்துநிலையை விழுங்கிவிடுவதில் போய் முடிவர் என்பதை வரலாறு காட்டுகிறது. இந்த நிலைப்பாடு, இடதுசாரி கட்சிகள் அரசாங்கத்தில் எப்போதெல்லாம் பங்கேற்கின்றனவோ, அப்போது அவர்களது அரசியல் நடவடிக்கையை அளவிடுவதற்கான அடிப்படையான வழியாக அமைந்துவிடுகிறது. இதற்கு எடுத்துக்காட்டுகளாக இருப்பவை கொசவோவிலும் ஆப்கானிஸ்தானத்திலும் நேட்டோவின் தலையீடுகளுக்கு இத்தாலியக் கம்யூனிஸ்டுகள் ஆதரவளித்ததும், அல்லது உக்ரைனிய இராணுவத்திற்கு ஆயுதங்களை அனுப்புவதற்கு ஆதரவாக ஸ்பெயின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக ஒலித்த குழுப்பாடலில் தனது குரலையும் இன்றைய யூனிடாஸ் போடோமோஸ்• கட்சியின் பெரும்பான்மை இணைத்துக் கொண்டதும் ஆகும். கீழ்ப்படிதலுள்ள இத்தகைய நடத்தை - கடந்தகாலத்தில் சந்தர்ப்பம் நேரிட்டவுடனேயே தேர்தல்களில் அடையும் தோல்விகள் உள்பட - பலமுறை தண்டிக்கப்பட்டிருக்கிறது.

போனபார்ட் ஜனநாயகமல்ல

1850களில் மார்க்ஸ், கிரிமியப் போர் பற்றித் தொடர்ச்சியாக எழுதிய அற்புதமான கட்டுரைகள் இன்றைய காலகட்டத்துக்கு இணையான சுவாரசியமான, பயனுள்ள விஷயங்களை உள்ளடக்கியுள்ளன. '18ஆம் நூற்றாண்டு இராஜதந்திர வரலாறு பற்றிய வெளிப்படுத்தல்கள்' (Revelations of the Diplomatic History of the 18th Century [1857]) என்ற கட்டுரையில், பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரும் ரஷியாவை ஐக்கியப்படுத்தி எதேச்சாதிகாரத்துக்கான அடிப்படையிட்டவராகக் கருதப்படுபவருமான மாஸ்கோ முடிமன்னரொருவரைப் பற்றி மார்க்ஸ் எழுதினார்: "பெயர்கள், தேதிகள் ஆகியவற்றின் தொடரொன்றை வேறு பெயர்கள், தேதிகள் ஆகியவற்றின் தொடரொன்றால் பதிலி செய்வதொன்றே போதும் - மூன்றாம் ஐவான் மன்னனின் கொள்கைகளும் இன்றைய ரஷியாவின் கொள்கைகளும் ஒரேமாதிரியாக மட்டுமல்ல, ஒத்த தன்மையுடையனவாயும் இருக்கின்றன என்பது தெளிவாகும்".[36]

• **யூனிடாஸ் போடோமோஸ் (Unidas Podomos)**: ஸ்பானிய மொழியில் "ஒன்றுபட்டால் நாம் வெல்வோம்" என்பதாகும். இது ஸ்பெயினிலுள்ள மரபான கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாறான இடதுசாரிக் கட்சிகளின் கூட்டணி.

36. Karl Marx, *Revelations of the Diplomatic History of the 18th Century*, in MECW, vol. 15, p. 86.

எனினும், 'நியூயார்க் டெய்லி ட்ரிப்யூன்' ஏட்டிற்கு எழுதிய கட்டுரை யொன்றில் அவர், ரஷியாவுக்கு எதிரான கூட்டணியைப் போற்றிப் புகழ்ந்த தாராளவாத ஜனநாயகவாதிகளை விமர்சித்து எழுதினார்: "ரஷியாவுக்கு எதிரான போரை சுதந்திரத்துக்கும் வல்லாட்சிக்கும் இடையிலான போர் என்று வர்ணிப்பது தவறாகும். அப்படியிருக்கு மானால் சுதந்திரம் என்பது இப்போது ஒரு போனபார்ட்டால்தான்• பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது என்றாகிவிடும் என்பதோடு, இந்த போரின் குறிக்கோள் என்று உறுதிபடச் சொல்லப்பட்டுள்ளது என்னவென்றால்[...] வியென்னா ஒப்பந்தங்களைப்≈ பேணிப் பாதுகாப்பதுதான் - இந்த ஒப்பந்தங்கள்தான் தேசங்களின் தன்னுரிமையையும் சுதந்திரத்தையும் இரத்து செய்திருந்தன"[37]. நாம் போனபார்ட் என்ற பெயருக்குப் பதிலாக அமெரிக்காவையும் வியென்னா ஒப்பந்தங்கள் என்பதற்குப் பதிலாக நேட்டோவையும் வைப்போமானால், மார்க்ஸின் அவதானிப்புகள் இன்றைய தினத்திற்காக எழுதப்பட்டுள்ளவையாகத் தோன்றும்.

ரஷிய தேசியவாதம், உக்ரைனிய தேசியவாதம் ஆகிய இரண்டையும் நேட்டோவின் விஸ்தரிப்பையும் எதிர்ப்பவர்களின் சிந்தனை, அரசியல் ரீதியான ஒரு முடிவுக்கு வர இயலாமைக்கும் கோட்பாட்டுரீதியான தெளிவின்மைக்குமான சான்றைக் காட்டுவதில்லை. கடந்த சில வாரங்களாக இந்த இரு நாடுகளுக்குமிடையிலான மோதலுக்கான மூல காரணங்களைப் பல வல்லுநர்கள் விளக்கியுள்ளனர் (எனினும் இவை எவ்வகையிலும் ரஷியாவின் காட்டுமிராண்டித்தனத்தைக் குறைத்து விடவில்லை); இந்த இரு நாடுகளில் ஏதொன்றுடனும் அணி சேராமல் இருக்கும் கொள்கையை முன்மொழிபவர்களின் நிலைப்பாடுதான் கூடுமான வரையில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் போருக்குப் பலியானவர்களின் எண்ணிக்கையைக் கூடுமானவரை குறைவானதாக ஆக்குவதற்குமான ஆகச் சிறந்த செயலூக்கமுள்ள வழியாகும். இது,

• **போனபார்ட்** : நெப்போலியன் போனபார்ட் (Napolean Bonaparte:1769-1821): இராணுவப் புரட்சி மூலம் பிரெஞ்சு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றித் தன்னைத்தானே பிரான்ஸின் முடிமன்னராக்கிக் கொண்டவர்.

≈ **வியென்னா ஒப்பந்தங்கள் (Vienna Treaties)**: 1815ஆம் ஆண்டில் ஆஸ்திரியத் தலைநகரில் ஐரோப்பிய ஆஸ்திரியா, இங்கிலாந்து, ரஷியா, பிரஷ்யா ஆகிய பிற்போக்கு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட பேராயத்தில் மேற் கொள்ளப்பட்ட முடிவுகளின்படி ஆஸ்திரியா, ரஷியா, பிரஷ்யா ஆகிய மூன்று நாடுகள் போலந்தைத் தமக்குள் கூறுபோட்டுக் கொண்டன. நெப்போலியன் போனபார்ட் தோற்கடிக்கப்படும்வரை பிரான்ஸ் மீது போர் புரியவும் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது.

37. Marx, 'Reorganization of the British War Administration', in MECW, vol, 13, p. 228

அருவமான கருத்துமுதல்வாதத்தில் நனைந்து நிற்கும் "அழகான ஆன்மாக்களைப்" போல நடந்துகொள்ளும் பிரச்சினையல்ல. இப்படி நடந்துகொள்வது, உலகியல் முரண்பாடுகளின் உண்மையான யதார்த்தத்தைக் கையாளும் திறனற்றது என்று ஹெகல் கருதினார். மாறாக விஷயம் என்னவென்றால், வரம்பில்லாதபடி போர் விரிவடைந்துகொண்டே போவதை நிறுத்துவதற்கான விஷமுறிவு மருந்தொன்றை யதார்த்தத்துக்குக் கொடுப்பதுதான். இராணுவத்திற்கு மேலும் அதிகமாக ஆள் சேர்க்க வேண்டும் என்று கூறுகிற, அல்லது வெளியுறவு விவகாரங்கள் மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்கான ஐரோப்பிய யூனியனின் உயர்நிலைப் பிரதிநிதி போல உக்ரைனியர்களுக்குப் "போருக்குத் தேவையான ஆயுதங்களை" வழங்குவதுதான் ஐரோப்பாவின் கடமை[38] என்று கூறும் குரல்கள் முடிவே இல்லாமல் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால், இந்த நிலைப்பாடுகளுக்கு மாறாக, போரின் உக்கிரத்தைக் குறைத்தல், சுதந்திர உக்ரைனின் நடுநிலைமை ஆகிய இரண்டு உறுதியான விஷயங்களின் அடிப்படையில் ஒய்வொழிச்சல் இல்லாத இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்வதுதான் நாம் செய்ய வேண்டியதாகும். ரஷியாவின் நடவடிக்கைகளுக்குப் பிறகு நேட்டோவுக்கான ஆதரவு அதிகரித்து வரும்போதிலும், உலகிலுள்ள மிகப் பெரிய, மிகுந்த ஆக்கிரமிப்புத் தன்மையுடைய போர் இயந்திரமான நேட்டோதான் உலகின் பாதுகாப்பு பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வு என்று பொது மக்கள் அபிப்பிராயம் கருதாமல் செய்வதை உறுதிப்படுத்துவதற்கு நாம் முன்பைக்காட்டிலும் கடுமையாக வேலை செய்வது அவசியம். நேட்டோ என்பது, தனது விஸ்தரிப்புக்காகவும் ஒற்றைத் துருவ ஆதிக்கத்திற்காகவும் உலகில் போருக்கு வழிவகுக்கும் பதற்ற நிலைகளுக்கு எண்ணெய் வார்ப்பதற்கே பணிபுரிகின்ற ஓர் அபாயகரமான, விரும்பத்தக்க எந்த விளைவையும் ஏற்படுத்தாத அமைப்பு என்பது எடுத்துக்காட்டப்பட வேண்டும்.

'சோசலிசமும் போரும்' என்னும் நூலில் லெனின், "(மார்க்ஸின் இயங்கியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தின்படி) ஒவ்வொரு போரையும் தனித்தனியாகப் பகுப்பாய்வு செய்யவேண்டியது வரலாற்று ரீதியாக இன்றியமையாதது என்று கருதுவதில்தான் மார்க்சியர்கள் போர் எதிர்ப்பு சமாதானவாதிகளிடமிருந்தும் ஆட்சிமறுப்பியர்களிடமிருந்தும் வேறுபடுகிறார்கள்" என்று கூறினார். மேலும், "வரலாற்றில்

38. Josep Borrell, 'It is a matter of life and death. So the EU will provide weapons for Ukraine's armed forces', in The Guardian, 27 February 2022, available at https://www.theguardian.com/commentisfree/2022/feb/27/eu-will-provide-weapons-for-ukraine-josep-borrell

ஏராளமான போர்கள் நடந்துள்ளன. எல்லாப் போர்களுடனும் தவிர்க்க முடியாதபடி இணைந்து வரும் பயங்கரங்கள், வன்கொடுமைகள், வேதனைகள், துன்பங்கள் ஆகியன ஒருபுறமிருந்தாலும், அந்தப் போர்கள் முற்போக்கானவையாக, அதாவது மனிதகுலத்தின் வளர்ச்சிக்கு நன்மை பயப்பதாக இருந்தன" என்றும் கூறினார்.[39] அவரது கூற்று கடந்த காலத்தைப் பொருத்தவரை உண்மையானதாக இருந்தாலும், சமகால சமுதாயங்களில் அதனை வெறுமனே திரும்பச் சொல்வது பார்வைக் குறைவானதாகும். ஏனெனில் பேரழிவு உண்டாக்கும் ஆயுதங்கள் இச்சமுதாயங்களில் தொடர்ந்து பரவலாகிக்கொண்டு வருகின்றன. போர்கள் - இவற்றைப் புரட்சிகளுடன் சேர்த்துக் குழப்பிக் கொள்ளக் கூடாது - சோசலிசக் கோட்பாட்டாளர்கள் நம்பிக்கை வைத்திருந்ததற்கு மாறாக மிக அரிதாகவே சமுதாயத்தை ஜனநாயகப்படுத்தும் விளைவைக் கொண்டிருந்தன. உண்மையில், அவை மனித உயிர்களுக்கு ஏற்படுத்தும் பேரழிவையும் அந்த அழிவினால் உற்பத்தி சக்திகளுக்கு ஏற்படும் நாசத்தையும் கருத்தில்கொண்டால் ஒரு புரட்சியை செய்வற்கான மிக மோசமான வழியே போர் என்பது பலமுறை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. நடுநிலையான இடதுசாரிகள் ஒருபோதும் மறக்கக்கூடாத பாடம் இது.

இடதுசாரிகளைப் பொருத்தவரை "போர் என்பது இதர வழிகளில் அரசியலை நீட்டிப்பதாக"• இருக்க முடியாது. அது கிளாஸ்விட்ஸின் புகழ்பெற்ற கூற்றாகும். யதார்த்தத்தில் போர் என்பது அரசியலின் தோல்விக்கான சான்றிதழ்தான். இடதுசாரிகள் சமுதாயத்தில் மேலாண்மை செலுத்தக்கூடிய, இன்றைய கடமைகளுக்குத் தனது வரலாற்றைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல் கொண்டதாகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் விருப்பம் கொண்டதாக இருப்பின், அது தன்னுடைய பதாகைகளில் "இராணுவவாதத்திற்கு எதிர்ப்பு", 'போர் வேண்டாம்" என்ற சொற்களை அழிக்க முடியாதபடி எழுதிக்கொள்வது அவசியம்.

•••

39. V.I.Lenin, Socialism and War, Collected Works, Vol 21, Progress Publishers, Moscow, 1974, pp 299-301

• "போர் என்பது இதர வழிகளில் அரசியலை நீட்டிப்பதாகும் (WAR IS THE CONTINUATION OF POLITICS BY OTHER (I.E.: VIOLENT) "MEANS": இது மேற்சொன்ன நூலில் 304ஆம் பக்கத்தில் காணப்படும் துணைத் தலைப்பாகும். இந்த கூற்றைக் கூறியவர் க்ளாட் ஃபான் க்ளாஸ்விட்ஸ் (Carl von Clausewitz :178-1831). பிரஷியாவின் இராணுவத் தளபதிகளிலொருவராகவும் போர் பற்றிய கோட்பாட்டு நூல்களை எழுதியவரும் ஆவார். இந்த கூற்றை லெனின் ஒப்புதலுடன் மேற்கோள் காட்டுகிறார்.